With new lifeblood.

The transforming essence
Courses its way up
Imparting energy
To the branches and stems
And the buds
Are bursting into bloom!

My crippled ardour
Seemingly out of my reach
Gets a shot of adrenalin
And is a fruit within my grasp!

- Ku.Pa. Rajagopalan

நாங்கள் இறந்தவர்கள்

நாங்கள்
இறந்தவர்கள்
அந்தகாரத்தின் ஆழத்தில் நின்று
எங்களை
ஏன் அழைக்கின்றீர்கள்?
அன்று
எங்களைச்
சுட்டெரித்த காட்டில்
இன்று
தென்னைமரங்கள் தழைத்தோங்கி
கொத்தாய் குலைவிட்டன.
பாலைகள் பத்தும்
கொன்றைகள் இரண்டும்
பூத்துச் சொரிந்து
மணம் எறிந்து
நிழல்பரப்ப
எங்களை ஏன் அழைக்கின்றீர்கள்?

நாங்கள்

பழைய நினைவுகள்
பிரக்ஞை அண்டங்கள்

அணுப்பிளந்து தெறிக்கும்
அனல் புள்ளிகள்
நாங்கள் இறந்தவர்கள்.

- காசியபன்

WE ARE THE DEAD

We are the dead
Why call us
From your depths of darkness?

The crematorium
Where
You burnt us to ashes
Is flourishing today.
Lush coconut palms
Are burdened with nuts.
Ten creepers
Two laburnums
Are full of bloom
Spreading their fragrance
Shedding their shade.
Why
Call us now?

We
Old memories
Clusters of consciousness

Fiery dots
Spurting from split atoms

We are the dead.

- Kashyapan

குருட்டு ஈ

ஒளிநன் று; ஒளியே அமுதம்
அது இனியது; வாழ்வு தருவது.
உண்மை; நான் மறுக்கவில்லை!

வெள்ளம் பெருகி ஓடினும்
நாய் நக்கியே குடிக்கும்.
வெள்ளமாய் ஒளி
வெளியை நிறைக்கிலென்?
உள்ளக் குகையில்
இருட்டே இருந்தால்
உலகமும் இருளாம்....

விளக்கை ஏற்றினேன்
வெடித்துச் சிரித்தது பேரொளி.
கிர்.... ர்ர்...... கிர்.
என்ன இரைச்சல்?
ஏனிந்தச் சுழற்சி?

ஒரு ஈ
சுற்றுது! சுற்றிச் சுற்றி,
சுழன் று மோதி,
விழுந்து எழுந்து
மேலும் சுற்றிச் சுற்றி மயங்குது.

குருட்டு ஈ
இருட்டில்லை எனினும்
வழி புரியலை அதுக்கு!

THE BLIND FLY

Light is good; Light is nectar;
It is angelic; it is life-giving
I deny not!

River may be in spate
But the dog only laps its drink.
What if a flood of light
Illumines the sky?
If the mind's cavern
Is steeped in darkness
The world is dark too...

I lighted the lamp
The bright light
Burst into laughter.
Grr... Rrr... Grr...
Why this din?
Why this swirl?

One fly
Swirling around
Round and round
Swirls and dashes
Decends, rises
Swirls around
And is in a daze.

வெளியெலாம் வெளிச்சம்,
அறையுளும் வெளிச்சம்,
நடுவிலே கதவு - அதில்
சட்டமிட்ட சதுரக் கண்ணாடி
வர்ணமிலா வெறும் கண்ணாடி.

அறைக்குள் ஒரு குருவி.
சிறகு விரித்துச் சிவ்வென்று பாயுது.
மோதுது. மீண்டும் பாய்ந்து,
மீண்டும் மோதி
மீண்டும் மீண்டும்
கண்ணில் குத்துது வெளியொளி
கருத்தில் பதியலை இடைத் தடை!
வெளியின் ஒளிமட்டும் போதுமோ,
உள்ளத்தில் இருளே மண்டிக் கிடக்கையில்?

- வல்லிக்கண்ணன்

Blind fly -
It is not dark
But it knows not its way!
It is bright light,
The room all lit up.
A door in the middle
In it
A square framed glass
Transparent

A little sparrow in the room.
Spreads its wings
And darts forth.
Bangs against the glass,
Bangs again,
Again and again.
The light outside hits its eyes.
But it cannot register
The transparent barrier.

Of what avail light outside
When mind is
But a trench of darkness?

- Vallikkannan

கற்பனை ஊற்று

ஆர்லந்தோ என்னும் நகரில் அரியதோர் ஏரியிலே
அழகிய மத்தாப்பூ ஊற்றொன்று கண்டேன்.
ஒளி விளக்குப் போடுகின்ற தாளத்திற்கு
ஒரு லயமும் பிசகாமல் ஆடுகின்ற
நீரூற்று ஆட்டக்காரி நாட்டியத்தின்
நேர்த்தியென்ன சொல்வேன்!
பசும்புல் தரைமீது பால் நிறத்துப்
பனிக்கட்டி உருள்வதுபோல் ஒரு காட்சி - அதனைப்
பார்த்துக் கொண்டிருக்கும் போதே
'படக்' என மாறிவிடும் மற்றொரு காட்சி!
இப்படித்தான் இங்குள்ள 'அப்போலோ' கிளம்பிற்றென்று
இருள்கிழிந்து வானேறும் தீரின் கரங்கள்
பொற்கொல்லர் பட்டறையில்
பொன் பரப்பும் மஞ்சள் ஒளி
விற்பட்ட அம்பு போல
விர்ரென்று எழுந்துபாயும்,
கற்காலக் கொள்கை மனிதர்
கடவுளர்கள் சந்நிதியில்
காவுக்கு ஓர் உயிரை வெட்டும்போது
பீறிட்டுக் கிளம்புகின்ற ரத்தம் போலச்
சீறித்தான் தாவுதய்யோ சிவப்பு வண்ணம்
மார்கழித்திருநாளில் நம்மூரில்
மங்கையர்கள் திருவாயில்
பாவிரித்துத் தத்தம் தெருவாயில் பரப்பிப்
பூவிரித்து வைக்கின்ற கோலம் போல்
கண்கொள்ளாக் காட்சி கண்டேன்.
நல்ல வேளை -

A SPRING OF FANCY

Orlando city
A gorgeous lakeside . . . . .

Glimpse did I
A lovely sparkler spring
Dancing
To the rhythm and beat
Of flashing light and chime

Wordless am I
To capture the allure
Of the bewitching sway
Of the Spring Danseuse!

A rolling panorma -

Milky icecubes rolling
On emerald lawn

And a change
Sharp and swift.....

Recalling Apollo flight
Watery arms
Zooming skyward
Tearing enveloping darkness

Yellow glow of golden lustre
Of the goldsmith works
Darting forth
Like arrows from strung bows

தனியாக ரசிக்கின்ற வாய்ப்பெனக்குத்
தப்பினேன் அதனாலே!
பெண்ணொருத்தி அருகிலிருந்தால் நீருற்றின்
வண்ணத்தைக்கணக்கெடுத்து - மறுநாளே
வகைக்கு ஒன்றாய்ச் சேலை கேட்பாள்!

- மு. கருணாநிதி

Men of stone age minds
Slaughtering a throbbing life
At god's altar
And blood spurting in fury
As a chilling replay
A spray of crimson hue

Back in our shores
In nippy Margazhi morn
Our dear women
Humming hymns melodious
Decking front yards
With flowers of yellow plume
Planted in pretty kolams
I saw it in land distant
In eye-filling vistas

My good fortune!
Alone I savoured
The visual feast
So escape I did!
A damsel by my side
Engulfed will I be
By demands compelling
For sarees galore
In colours on show!

- M. Karunanidhi

கேட்கிறேன்; சொல்லுங்கள்!

பல்சான் றீரே! பல்சான் றீரே!
பகுத்துத் தொகுக்கும் பல்சான் றீரே!
கல், மண், தீ, நீர், காற்றெனப் புவியோர்
சொல்பொருள் அனைத்தும் தோன்றிய தெங்ஙனம்?
வானும் மதியும் மண்ணிடைக் கடலும்
தானே இயங்கும் தத்துவம் யார்செயல்?
ஒருதுளி விந்து உடலிற் புகுந்து
உயிரொடு கண்வாய் செவியென விரிந்து
பத்தாம் மாதம் பளிங்குபோல் வெளிவரும்
வித்தை யார் செயல்? விளக்கம் எப்படி?
ஏழில் ஒருவன் எழுபதில் ஒருவன்
சாவை யணைத்துத் தன்னை மறந்து
போவது எவ்விடம்? போனபின் எந்நிலை?
நுவலரும் நல்லோர் நோய்வாய்ப் படுதலும்
கயவர் கள்வர் காளைபோல் வாழ்தலும்
பூர்வஜென் மத்தின் புதிய தொடர்கதை
என்பர் சிலபேர்! ஏற்பீரோ, மாட்டீரோ?
கோடை வசந்தம் குளிர்பனி பூமழை
தோன் றுவ தெங்ஙனம்? சுழற் றுவ தெவ்விதி?
விஞ்ஞா னத்தால் விவர மறிந்து
அஞ்ஞானத்தை அகற்ற மாட்டீரோ?
சந்திர மண்டலம் தழுவிய ஞானம்
சாவைத் தடுக்கச் சக்தி இல் லாததேன்?
நானென நிமிர்ந்து நமதென முழங்கி
தானென வாழ்ந்து தரணியை மிரட்டி
ஆரவா ரித்த ஆதிக்கக் காரரும்
பள்ளி விழுந்து பாவமு ணர்ந்து

MY QUESTIONS- ANY ANSWERS?

Eh! The erudite scholars!
Eh! The analytical pedants!

Stone, sand, fire, water, air
How were these elements born?
Sky and moon and sea
Whose act propels them?
A sperm enters the body
Assumes life and form
Eyes mouth and ears flowering
Emerging as marble babe
Whose act this marvel?
How to unravel this mystery?
One at seven another at seventy
Embrace death sink into nowhere
Whither they? What thereafter?
The noble languish in disease
The vile and wily flourish
Just the overhang of last birth -
So some say! Agree, Reject?

Summer spring winter rains
How they appear? Under which law?
Scan the realm of science
Why not dispel ignorance?
Prowess conquering moon
Why powerless against death?

கொள்ளி வரைமனம் குமைந்ததன் காரணம்
அவனோ, பிறனோ? ஆட்டுவித் தான்எவன்?
மூலம் வித்து முளைப்பது பூங்கொடி
மூலம் விந்து முளைப்பது பாலகன்
மூலம் மேகம் முகிழ்ப்பது பொன்மழை
மூலம் இல்லாமல் முளைப்பன இல்லையே!
ஆயின் இந்த அவனிக்கு மூலம்!
யாரோ அறியேன் அவனை என்மனம்
இறைவன் என்பது எவ்வழி தவறாகும்?

பல்சான் றீரே; பல்சான் றீரே!
பதிலுரைப் பீரோ பல்சான் றீரே!

– கண்ணதாசன்

Arrogant, full of self-importance
Self-centered terrorising the world
Dictator who thundered and roared
Felled by disease filled with remorse
Burning within till the grave
Reason-he or someone else?
Who is directing this drama?

Seed the cause; sprouts the flower
Sperm the root; blossoms the child
Cloud the cause; unfolds the shower
No shower no sprout sans cause
Then the primal cause of earth's life?

I know not who is the cause
My mind prompts- He is God
How I can be wrong , at fault?

Oh! The erudite scholars!
Answer me, ye Scholars!

Kannadasan

தேரும் திங்களும்

"ஊரெல்லாம் கூடி ஒருதேர் இழுக்கிறதே;
வாருங்கள் நாமும் பிடிப்போம் வடத்தை"
என் று
வந்தான் ஒருவன்.

வயிற்றில் உலகத்தாய்
நொந்து சுமந்திங்கு நூறாண்டு வாழ்வதற்காய்ப்
பெற்ற மகனே அவ னும்;
பெருந் தோளும்
கைகளும், கண்ணில் ஒளியும், கவலையிடை
உய்ய விழையும் உளமும் உடையவன் தான்;

வந்தான் அவன் ஓர் இளைஞன்
மனிதன் தான்.
சிந்தனையாம் ஆற்றற் சிறகுதைத்து வானத்தே
முந்த நாள் ஏறி முழுநிலவைத் தொட்டுவிட்டு
மீண்டவனின் தம்பி
மிகுந்த உழைப்பாளி!

"ஈண்டு நாம் யாரும் இசைந்தொன் றி நின் றிடுதல்
வேண்டும்" எ னும் ஓர் இனிய விருப்போடு
வந்தான் குனிந்து வணங்கி வடம் பிடிக்க;

"நில்!" என் றான் ஓராள்
"நிறுத்து!" என் றான் மற்றோராள்
"புல்" என்றான் ஓராள்
"புலை" என்றான் இன்னோராள்
"சொல்" என் றான் ஓராள்
"கொளுத்து" என் றான் வேறொராள்

CHARIOT FESTIVAL

"The whole town has assembled
And is pulling the chariot;
Come along
Let us also give a hand"
Came that person.

He was too
An offspring of Mother Earth
Borne with pain
And blessed to see
A hundred autumns.
With broad shoulders,
Strong arms,
Eyes aflame with light,
Riding his cares
And determined to make it.

He came.
A young man
A homo sapien!
His 'elder brother'
Had taken a giant step
For mankind the other day -
Flew into space
On the wings of human intellect
Touched base on the moon
And returned a conqueror

He –
A hard-working youngster!

கல்லொன்று வீழ்ந்து
கழுத்தொன்று வெட்டுண்டு
பல்லோடு உதடு பறந்து சிதறுண்டு
சில்லென்று செந்நீர் தெறித்து
நிலம் சிவந்து
மல்லொன்று நேர்ந்து
மனிசர் கொலையுண்டார்.

ஊரெல்லாம் கூடி இழுக்க உகந்த தேர்
வேர் கொண்டதுபோல் வெடுக்கென்று நின்றுவிடப்
பாரெல்லாம் அன்று படைத்தளித்த அன்னையோ
உட்கார்ந் திருந்துவிட்டாள் ஊமையாய்த் தான்பெற்ற
மக்களுடைய மதத்தினைக் கண்டபடி.

முந்த நாள் வான முழுநிலவைத் தொட்டுவிட்டு
வந்தவனின் சுற்றம்
அதோ மண்ணிற் புரள்கிறது!

- மஹாகவி

"We should all work
In unison here" -
With this noble resolve
He came
Bowed his head in salutation
To get hold of the chariot rope.
"Wait!" said one
"Stop!" said another
"Low" shouted the third
"Untouchable" yelled another
"Kill" fumed one
"Burn" screamed another.

A stone came flying
A neck was slashed
A lip flew off with a jaw
A splash of blood
Ground turned crimson
A man lay spreadeagled
Slaughtered.
The chariot
Waiting to be pulled by the whole town
Screeched to a grinding halt.

Mother Earth
The fountainhead
Of the world and her children
Sat dumbfounded
Gazing at the spectre
Of her children's religion.
The kin
Of the man
Who conquered the moon
Just the other day
Lay on the ground
As dead scrap.

- Mahakavi

வெங்கனலில் குளித்தோரை வெயில் சுடுமோ

என்னைச் செதுக்குகிறாள் - இயற்கை
இன்னும் உயர்த்துகிறாள்
பொன்னைச் சுரங்கத்திலே -எடுத்தவள்
புட(ம்) இடுகின்றனள்.

சிற்றுளிக் காயமெலாம் -உடலைச்
செம்மைப் படுத்துதடா
பற்றும் துயர்நெருப்பில் -என துயிர்
பக்குவம் காணுதடா.

பொங்கிவரும் விழி நீர் - மனதைப்
புனித மாக்குதடா
வெங்கன லில்குளித்தோம் - எமை ஒரு
வெய்யில் சுடுமோடா?

- குலோத்துங்கன்

ORDEAL BY FIRE

Mother Nature
Sculpts me
Ennobles me
Digs out gold
From mine pits
And refines me.

Chisel strokes'
Trail of wounds
Lends value sublime
Leaping flames
Of grief engulf
Only to toughen me.

Tears well up
In my eyes
And cleanse my soul

We are children
Of ordeal by fire
Will mere sunrays
Scorch us?

- Kulothungan

அடையாளம்

ஆழங்கள் எனக்குள்
அகலங்களாகி விடுகின்றன
உயரங்களாகி விடுகின்றன
அடிக்கடி ....

அகலம் நீளத்தில் ஒன்றி
நீளமும் உயரமும்
ஒன்றில் ஒன்றொடுங்கும்

அப்புறம் அது
நாம ரூபங்களைக் கழற்றியெறிந்து
எங்கும் வியாபிக்கும்
நிர்வாணியாய்.....

அதில் என் அறிவு
தன்னை இழக்கும் போது

காலம் கைவசப்படும்

அப்புறம் பிறக்கும்
உணர்வில் தெரிவது
என் அடையாளம்.

- புவியரசு

IDENTITY

Often
Inside me
Depths become breadths
Become heights

Breadth merges in length
Length and height
Sink into each other

Then
It discards name and form
Pervades space
In cosmic nudity...

In that
My intelligence
Loses itself

And time within my grasp

Out of this churn
Emerges a sensitivity -
My identity.

- Puviyarasu

இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்கு.....

இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்கு
மூட்டை கட்டி அந்த முழுப்பாரம் பின் முதுகிற்
போட்டுக் குனிந்து புறப்பட்டோம் நீள் பயணம்
தேட்டம் என்று நம்பி, சிதைந்த பழம்பொருளின்
ஓட்டை, உடைசல், உளுத்த இறவல்கள்,
பீத்தல், பிறுதல், பிசகி உதிர்ந்தவைகள்,
நைந்த கந்தல் - நன்றாக நாறிப் பழுதுபட்டுச்
சிந்தி இறைந்த சிறிய துணுக்கு வகை-
இப்படி யான இவற்றையெல்லாம் சேகரித்து
மூட்டை கட்டி, அந்த முழுப்பாரம் கண் பிதுக்கக்
காட்டு வழியிற் பயணம் புறப்பட்டேம்.

இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்கு,

மூட்டை முடிச்சு முதலியன இல்லாதார்
ஆட்டி நடந்தார், இரண்டு வெறுங்கையும்
பாதை நடையின் பயணத் துயர் உணரா
மாதிரியில் அந்த மனிதர் நடந்தார்கள்.
அமிரிக்கப் பாங்கில் அவர்கள் நடந்தார்கள்.
மற்றும் சிலரோ வலிமையுள்ள ஆயுதங்கள்
பற்றி, முயன்று, பகை களைந்து, மேலேறி
விண்வெளியை எட்டி வெளிச்செல்லு முன்பாக
மண் தரையில வான வளப்பைச் சமைப்பதற்கும்,
வாய்ப்பைச் சமனாய்ப் பகிர்ந்து சுகிப்பதற்கும்
ஏய்ப்பை ஒழித்தே இணைந்து நடப்பதற்கும
நெஞ்சம் இசைந்தார்.
நிகழ்த்தினார் நீள்பயணம்.

WE CARRY THE BURDEN OF TWO THOUSAND YEARS

Ours an ancient burden of two thousand years.
Bent under the load
We have embarked on a journey, long.
Savouring it as treasure -
The fossilized junk
Scrap, odds and ends, decayed leftovers,
Rubbish, debris, mindless droppings,
Tattered remnants,
Rancid residues,
Scattered tidbits -
Collecting all these
Into a bundle
With eyes popping out
Under its crushing weight
We
Ventured on our journey
Into the forest.

Ours an ancient burden of two thousand years.

Those with no such burden
Walked with ease
Swinging their arms.
They walked
Not feeling journey's fatigue.
They walked
With 'African' abandon.

பின் முதுகிற் பாரப் பெருமை இலாதவர்கள்
இத்தனையும் செய்தார்.
இனியும் பல செய்ய
எத்தனிப்போம் என்றார்.
இவை கண்டும்
நாமோ
இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை அத்தனையும்
சற்றே இறக்கிச் சலிப்பகற்றி, ஓய்வு பெற்றுப்
புத்தூக்கம் எய்திப் புறப்படவும் எண்ணுகிலோம்.

மேலிருக்கும் மூட்டை இறக்கி, அதை அவிழ்த்துக்
கொட்டி உதறிக் குவிகின்ற கூளத்துள்
வேண்டாத குப்பை விலக்கி, மணி பொறுக்கி,
அப்பாலே செல்லும் அறிவு விழிப்பென்பதோ
சற்றேனும் இல்லோம்.
சலிப்பும் வலிப்பும் எழ,
பின் முதுகைப் பாரம் பெரிதும் இடர்ப்படுத்த
ஊருகிறோம் ஊருகிறோம்- ஓயாமல், ஊருகிறோம்.

பரந்த உலகோர் பலரும், சுமையைச்
சுருங்கும்படியாய்க் குறைத்துச் சிறிதாக்கிக்
கைப்பைக்குள் வைத்துக் கருமங்கள் ஆற்றுகையில்,
வெற்றுக்கை கொண்டும் வியப்புகளை ஆக்குகையில்
புத்தி நுட்பம், செய்கை நுட்பம், போக்கு நுட்பம்
என்பவற்றால்

Some others
Wielding powerful weapons
Vanquishing foes
Forging ahead
Conquering space.

Meanwhile
Set their heart
On fashioning heaven on earth
On equalising opportunities
On banishing exploitation.
On marching shoulder to shoulder
Have embarked on a long journey.
Those with no back-breaking load
Have these laurels.
Have vowed to achieve more.

But we -
Even after watching their strides,
Think not
To unload the ancient load
To remove fatigue
To rest awhile
And march with
Rejuvenated steps.

We have shunned the good sense
    To take down the load
    To unbundle the contents
    To discard the junk
    To garner the sublime
    To resume the long journey.

With pain and exhaustion
Weighing us down
We crawl and crawl
And crawl endlessly.

சித்தி பல எட்டிச் செகத்தினையே ஆட்டுகையில்,
நாங்கள் எனிலோ நலிந்து மிகவிரங்கி,
பின் முதுகைப் பாரம் பெரிதும் இடர்படுத்த
ஊருகிறோம, ஊருகிறோம் - ஓயவில்லை,
ஊருகிறோம்.

வேண்டாத குப்பை விலக்கி, மணி பொறுக்கி
அப்பாலே செல்லும் அறிவோ குறைவு
ஓ!
இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்கு;
பண்பாட்டின் பேரால் பல சோலி எங்களுக்கு.

- முருகையன்

Many in this Mother Earth
Lighten their load
Load but a backpack
Perform miracles
With hands free and supple
Lord over the world
With achievements amazing
Armed with nothing but
Right thinking
Right action
Right direction

But we keep crawling
With spirits jaded
Self-esteem at a low ebb
With burden weighing down
We crawl, keep crawling.

Discarding the unwanted
Treasuring but the jewels
Why can't we learn this?

Oh!
Ours a burden of two thousand years
Culture is a cross we carry.

- Murugayyan

விளம்பரம்

விண் முட்டும கோபுரம்
விரைந்தேன் உள்ளே
ஜீவகளை சொட்டும்
எழிலமிகு சிலை
சொககி நின்றேன்
எந்தக் கலைஞனின்
கை வண்ணமிது
விடை இலலை
சிலைககு மேலே
குழல விளக்கு
இனனார் உபயமென்று
பிரகாசமாக
எடுத்தியமபின
எழுத்துககள்.

- கோ.மு. கோதண்டம்

THE SUBLIME - THE RIDICULOUS

Gopuram kissing the sky
I rushed inside
A bewitching statue
Pulsating with life
I stood enthralled
Which artist
Created this marvel
No answer.

Above the statue
A ribbon of 'tube light'
"So-and-so's donation"
Screamed a line
In bold letters.

- K.M. Kothandam

*

செம்படவன் ஒருவன்,
இரண்டு வரால் மீன்களைப்
பிடித்து வருகிறான்;

நீ அவற்றை விலைக்கு வாங்கித்
தடாகத்தில் துள்ள விடுகிறாய்.

வேடன் ஒருவன்
இரண்டு புறாக்களைப்
பிடித்து வருகிறான்;

நீ அவற்றையும் வாங்கி
வானத்தில் பறக்க விடுகிறாய்.

நான்
என்றோ என்றோ
என் உள்ளுயிரை வாங்கி வைத்திருக்கும்
உன்னை வியந்து பார்க்கிறேன்

"என்ன பார்க்கிறீர்கள்... உங்களுக்கும்...."

"வேண்டாம்..... வேண்டாம்.....
என்னை மட்டும் விட்டு விடாதே!
விடுதலை செய்து விடாதே!"
என்று கெஞ்சுகிறேன்.

– மீரா

*

A fisherman
Catches two veraal fish;

You buy the two
Only to let them
Jump back into the pond.

A hunter
Catches two pigeons;

You buy them too
Let them wing their way
Into the blue sky.

Since a nameless yesterday
The core of my life
In your grip -
I look at you admiringly.

"No... No...
Pray not let me go!
Free me not from your hold!"
I implore.

- Meera

சுற்றி

செறிவூட்டியபடி
உன்னைநான் சுற்றி வருகிறேன்

இன்றுபோல் இல்லாமல்
இன்னொருநாள் போல இல்லாமல்

எங்கோ போய்க்கொண்டிருக்கும்
வெட்டவெளி
நின்று வேடிக்கை பார்க்க
உன்னைநான்
சுற்றி வருகிறேன்

உன்னைச் சுற்றி
வட்டங்கள் உருவான பின்
விலகிக் கொள்கிறேன்

இனி
வட்டங்கள்
செறிவூட்டியபடி
உன்னைச் சுற்றி வரும்

உன்னைச் சுற்றி
உன் செறிவு உருவானபின்
வட்டங்கள் விலகிக் கொள்ளும்

பின்
உன்செறிவு
செறிவூட்டியபடி
உன்னைச் சுற்றிவரும்

- அபி

ROUND AND ROUND

Imparting essense
I circle around you
Unlike today
Unlike another day
With the meandering
Outer space
Standing and staring
I circle around you
After circles form
Around you
I withdraw
Hereafter
The circles
Would circle around you
Imparting essence
After essence forms
Around you
The circles would depart
Then
Your elemented Essence
Wouid circle around you
Imparting essence
Upon essence...

நான் மரணத்தைப் பற்றிச் சிந்திக்கிறேன்

சூரியாஸ்தமனம் கழிந்தபிறகு
சாம்பல் இரவில்
யுகங்களாக விசுவரூபமெடுக்கும்
இந்த நிமிடங்களில்
நான் மரணத்தைப் பற்றிச் சிந்திக்கிறேன்.

இந்தப்
படகுத்துறைக்கு
நான் துடிப்புகளோடுதான் வந்தேன்
ஆனால்
எனக்குக் காகித ஓடங்களே கிடைத்தன.

இந்த
இசை மண்டபத்திற்கு
நான் பாடல்களோடுதான் வந்தேன்
ஆனால் இங்கே
செவிடர்கள் மட்டுமே இருந்தார்கள்.

இந்தப் பாதைக்கு
நான்
ஒரு நல்ல வழிப்போக்கனாகவே வந்தேன்
ஆனால்
இது ஒற்றையடிப்பாதை.

எல்லாம் முடிந்து விட்டது.
இந்த மண்ணில்
இனி நான் நேசிப்பதற்கு
'ஆஸ்த்மா' மாத்திரையைத் தவிர
வேறு என்ன இருக்கிறது?

I THINK OF DEATH

Past sunset
Ashen night
These moments
Looming as aeons
I think of death.

Came I
To this jetty
With my oars
But
Found only paper-boats.

Came I
To this music hall
With my songs
But
Found only the deaf.

Came I
To this path
As an eager traveller
But
Found only a lonely footpath.

It is all over
On this earth
My love embraces

இனியொரு
மறுவிடியலில்
என்னுடைய பாடல்
இந்த ரோஜாக் காடுகளில் ஒலிக்காது.

என்னுடைய பால்யகாலங்களை
நான் இழந்ததைப் போல
நீங்கள் என்னை இழக்கப் போகிறீர்கள்.
வயோதிகத்தையும் முந்திக் கொண்டு
மரணம்
என்னைச் சந்திக்க வருகிறது.
நான்
என்னுடைய சுவாசப்பைகளைப்
பட்டினி போட்டுவிட்டு
மரணத்திற்கு விருந்து வைக்கப் போகிறேன்.
என்னுடைய மரண ஊர்வலத்தில்
சாவுப் பறைகளை முழக்கவேண்டாம்
சின்னச் சின்னப்
புல்லாங்குழல்களை ஊதுங்கள்.

என்னுடைய உடலை
ஒருசேரியில் அடக்கம் செய்துவிடுங்கள்.

எனது கல்லறைக்கு அருகில்
ஒரு சாக்கடையும்
கொசுக்களின் ரீங்காரமும் இருக்கட்டும்.

ஏழைகளின் கவிதை
அவர்களுடைய சுடுகாட்டினிடமே
பத்திரமாக ஒப்படைத்துவிடுங்கள்.

"சிவப்புவசந்தம் வருவதற்குமுன்
உங்கள்குயில் இறந்துவிட்டது" என்று
அவர்களிடம் சொல்லிவிடுங்கள்.

எனக்குப் பிறகு
உங்களைத் தேடிவருகிற கவிகளைத்
தயவு செய்து
கல்யாணப் பந்தலில யட்டும்

Only 'Asthma' pills.
On another morn
My songs wouldn't chime
Among the rose bushes.

My youth had I lost
Now
Your turn to lose me.
Jumping the queue
Pushing old age aside
Death
Rushing to claim me.
I'm starving my lungs
To feast the Death.

Mark not
My funeral procession
With 'Parai' beats
Blow soft notes
With dainty flutes.

Bury my body
In a 'cheri' nook.

Beside my grave
Let there be
A gutter
And the hum of mosquitoes.

Hand over
This poor man's poet
To their own cremation ground.

Do tell them:
"Before the arrival
Of the red spring

உட்காரவைத்து விடாதீர்கள்.

பாரசீகத்து 'புல்புல்' பறவைகளுக்கு
என்னுடைய மரணச் சேதியை
அறிவித்து விடுங்கள்.

நாளைக்கு உதயமாகப் போகும்
பிறைச் சந்திரிகைக்கும்
நட்சத்திர புஷ்பங்களுக்கும்
ஆறுதல் கூறிவிடுங்கள்
உங்களைச் சந்திக்கிற
வழிப்போக்கர் களிடமெல்லாம்

'மிகச் சின்ன வயதிலேயே
ஒரு ஞானியைப்போல எழுதியவன்
மிகச் சின்ன வயதிலேயே
ஒரு கிழவனைப்போல மரணமாகி விட்டான்'

என்பதை மட்டும்சொல்லுங்கள்
எனக்காக யாரும் அழவேண்டாம்.
ஆனால்,

எனது கல்லறையை மட்டும்
பன்னீர் மரங்களின் நிழலில்
எழுப்பி விடுங்கள்.

எனக்காக யாரும் அழவேண்டாம்.
பன்னீர் மரங்கள்
அந்தப் பன்னீர் மரங்கள்!

- நா. காமராசன்

Your nightingale has died."
Poets seeking you
After my exit
Seat them not
In wedding 'pandals'
- My entreaty.

Send a message
To Persian bulbuls
I am gone.

Spare a word of comfort
To the crescent moon
To the flowery stars
Unfolding tomorrow.

To the pedestrians you encounter
Simply whiser softly:
"He wrote like a 'gnani'
At a young young age
And
At a young young age
Died like an old man."

No tears for me please.
But...
Raise my tomb
Under the shade
Of Panneer trees.

No tears for me please.
Panneer trees!
Those Panneer trees!

- Naa. Kamarasan

பாத்திரங்கள்

“எனக்கு மட்டும் எழுதத் தெரிந்தால்
எழுதித் தள்ளி விடுவேன்” என்கிறாய்.
எழுது. எழுதத் தெரிந்துவிடும்!

உன்னைக் குறித்த உன் மதிப்பீடுகளை -
உனக்கு மட்டுமே தெரிந்தவை அவை -
உணர முடியாத ஒத்துக் கொள்ளாத
ஒருவனின் அறியாமையை.

படித்தவன் என்பதற்குப் பொருத்தம் இல்லாத
என்ன படித்திருந்தும் திருத்தம் உறாத
இவன் பச்சைத் தமிழ்ச் சொற்களை.

எதில் எதில் ஆட்சி செய்தேன்
எப்படி எப்படி எல்லாம் நடத்தினேன்
என்கிற என் இழி செயல்களை.

எண்ணம் சொல் செயல்
யாவற்றிலும் நிகழ்த்திய சிறுமையை.

எவற்றையும் எழுதும்போது
இவற்றையும் அடிக்குறிப்பாக எழுது:

ஈயம் ஆவதற்குப் பித்தளை
இளித்த இனிப்புகள்தாம் இவை.

ஈயமோ பித்தளையோ
'பாத்திரங்கள்' ஆவதற்கும் ஆக்குவதற்கும்
பாடாய்ப் படுத்தியவை.

UTENSILS*

'If only I knew the art of writing
I would churn out volumes' -
So you lament.
Write. And you'll learn to write!

Your evaluation of yourself -
It's your exclusive preserve -
The unfelt unacknowledged
Stupidities.

The raw elemental Tamil words
Out of sync with the cultivated
Defying education's civilising urge.

How all I lorded it over -
How I rode on the crest
Of my transgressions.

The ignominies heaped
On thought-word-deed
Whatever you write
Append this footnote:
These are but
The pathetic attempts
Of brass aping lead.

---

* The Tamil word, 'Paathiram' means both 'utensil' and 'character (in a story)'

உடைத்துவிடுவதற்கு ஆக அல்ல,
ஒடுக்கு எடுக்கும் முயற்சியில்,
ஒருவரை ஒருவர் தட்டியவை
ஓங்கியும் மெதுவாகவும்!

- த. பழமலய்

Be it brass be it lead
They let loose hell
To become 'utensils'
Or in making 'utensils.'

Not breaking each other,
In the attempts to shape up
They exchange slaps
Some hard some gentle.

- Tha. Pazhamalai

விடுதலை

இன்றுதான் நினைவுக்கு வந்தது
நேற்று 'அந்த' நாள் என

கைகள் கசகசக்க
பூச்சுமை தலையை அழுத்த
புகை கண்ணை குருடாக்க
அரைமயக்கத்தில்
புரியாத மொழியில் திணிக்கப்பட்ட சத்தியங்களை
ஏற்றுக்கொண்ட நாள்
ஆண்டு தோறும்
துக்கங்களை சுமந்து வந்து
சுய பரிதாபத்தை தோற்றுவித்து
மனத்தை ரணமாக்கிப் போகும் நாள்

அக்னியின் சாட்சியை
நீதிமன்றம் ஒதுக்கியும்
நெஞ்சில் மூண்ட தீயை
நெஞ்சுரம் அணைத்தும்
மனக் கொப்புளங்களைக் கீறி
சீழ் வடிய வைக்கும் நாள்

இழந்த ஒரு துணைக்கு ஈடாக
ஓராயிரம் தோழமைகள் பெற்றும்
உயரங்கள் தாண்டியும்
காயங்கள் காய்ந்தும்
தோல் தடித்தும்
நெஞ்சம் நிறைந்தும்

FREEDOM

Only today I remembered,
Yesterday was 'that day.'

Hands greasy and sticky
Head bent under a floral load
Eyes smarting with smoke
In a frenzied daze -
The day I accepted
Edicts rammed down
In an incomprehensible language.
The day revisits each year
Carrying sorrows
Evoking self-pity
Scalding the mind.

Law has annulled
The covenant by sacred fire
And the fire in the hurt
Put out by self-will
Still
Incising the mind's blister
And draining the puss -
This day.

Got a thousand friendships
Against one lost partner
Scaled heights

விழித்ததும்

ஒரு விநாடி

அடிவயிற்றில் சில்லிட வைக்கும்

'அந்த நாள்'

நேற்று முதன்முறையாக மறந்தே போயிற்று.

- வத்ஸலா

Wounds dried up
Skin hardened
Heart brimming

At the break of 'that' dawn
For a moment
An icy spear thrust.
In the bottom of my pit -
'That Day'
For the first time
Slipped my mind yesterday.

Vatsala

கடற்புறம்

காலமகள் மணலெடுத்துக்
கோலமிட்ட கடற்புறத்தில்
ஏழை மகள் ஒருத்தி.
முன்னே கடல் விரியும்
முது கடலின் பின்னாடி
விண்ணோ தொடரும்
விண்ணுக்கும் அப்பாலே
விழி தொடர நிற்கின்றாள்.

தாழை மர வேலி,
தள்ளி ஒரு சிறு குடிசை;
சிறு குடிசைக்குள்ளே
தூங்கும் சிறு குழந்தை
ஆழக்கடலில்
ஆடுகின்ற தோணியிலே
தாழம்பூ வாசம்
தரைக் காற்றுச் சுமந்து வரும்.
காற்றுப் பெருங்காற்று
காற்றோடு கும்மிருட்டு
கும்மிருட்டே குலைநடுங்க
கோஷமிட்ட கடற் பெருக்கு.
கல்லு வைத்த கோவிலெல்லாம்
கைகூப்பி வரம் இரந்த
அந்த இரவு
அதற்குள் மறக்காது.
திரைகடலை வென்று வந்தும்
திரவியங்கள் கொண்டு வந்தும்
இந்தச் சிறுகுடிசை,

THE SEASHORE

The seashore
Time's handiwork
A carpet of granular sand-
Stands a daughter of poverty.
Sea's expanse in the front
Eyeing beyond the sky's depth
Stands this lonely sentinel.

A short live fence
Enclosed a tiny hut;
Inside the hut
A tiny child asleep.
Far in the sea
A tossing boat
Breathing floral aroma
Wafted in by land breeze.

A burst of cyclone
Inky darkness its companion.
Striking fear into darkness itself
Fierce roar of the sea.
Prayers aplenty
In the temples ashore.
That night
Not easy to forget.

இரண்டு பிடி சோறு,
தோணி உடையான்
தரும் பிச்சை என்கின்ற
கோணல் நினைப்பு,
பெருமூச்சு.

தானாய் விடிவெள்ளி
தோன்றுகின்ற சங்கதிகள்
வானத்தில் மட்டும்தான்.
வாழ்வில் இருள் தொடரும்.

- வ.ஐ.ச. ஜெயபாலன்

Battling the waves
And fetching the bounty.
But
In this little hut,
Just two handfuls of rice.
Crumbs thrown by the boat owner
This trail of thought,
A heavy sigh.

All the talk
Of Vidivelli blossoming on its own
True only of distant skies.
Darkness haunts the little lives.

Va.Ja.Sa. Jeyabalan

கவிதை உள்ளம்

வெண்முகிலோடு நாமும்
மிதக்கலாம் வீசுகின்ற
தண்ணிய தென்றலூடும்
தளிர்களின் மென்மையூடும்
பண்ணுடன், உணர்வைப் பெய்யும்
பசுங்கிளைக் குயில்களோடும்
தண்ணீரும் தண்ணீரும் போல்
கலந்துற வாடலாமே.

கொட்டைப் பாக்கன்ன
சின்னக் குருவிகளோடு
நாமும் ஒட்டலாம்.
அவற்றின் நீண்ட
ஊசி மூக்கோடு சேர்ந்து
மொட்டவர் மலரில் தேனை
முகரலாம்; இழைகள் பின்னும்
பட்டுநூற் பூச்சியோடும்
பலகதை பேசலாமே.

மல்லிகைப் பூவில், நெஞ்சம்
மகிழலாம்; மறுகால் அந்த
மெல்லிதழ் செறிவில் தெய்வ
மேன்மையை உணரலாம், செவ்
வல்லியின் அமைவில் தூய்மை
அடையலாம்; மணத்தைச் சிந்தும்
முல்லையில் காதற் பெண்ணின்
முறுவலைக் காணலாமே.

POETIC MIND

Let us-
Float with cotton wool clouds.
Merge and play
Like water uniting with water
With cool floating breeze
With soft velvety shoots
With the lilting melody
Of the koel pouring out
Emotional ecstacy.

Let us be one
With the tiny sparrows.
Fusing with
Their needle beaks
Let us collect honey
From the blossoming flower.
Let us share stories
With the silkworm
Spinning delicate strands.

Let us lose ourselves
In the fragrance of the jasmine flower.
Next morning
In the luxuriant soft petals
Let us feel divinity.
Let us be touched by purity
In the form of oleander;

குழந்தையின் சிரிப்பில் நெஞ்சம்
குழையலாம்; புலரிப் போதில்
விழும்பனித் துளியில், புல்லின்
விளிம்பினில், தரையில் குந்தி
எழும் சிறு புள்ளின் வண்ண
இறக்கையின் துடிப்பில் நெஞ்சம்
திளம்பலாம்; அவற்றில் இன்பத்
தனிச்சுவை காணலாமே.
இயற்கையின் அசைவு தோறும்
இன்பத்தை நுகரலாம்; விண்
வயல்களில் உலக வாழ்வின்
மறைபொருள் தெளியலாம்; நம்
அயலவர் துயரில் பங்கும்
அடையலாம் எனிலோ, வாழ்வின்
கயமைகள் கழிய நாமோர்
காவியம் பாடலாமே.

- எம்.ஏ. நுஃமான்

In the heady fragrance of mullai
Let us discern
The smile of the beloved.

Let us dissolve
In the caress
Of a child's smile.
Let us get enthralled
By the kiss of
Dewdrops at the break of dawn
And the cool grass blades .
Let us luxuriate
At the tremulous flutter
Of the tiny bird
Zooming from its languid perch.

Let us drink in the delight
Of Nature's million vibrations;
Let us scan
The sky's expanse
And glean meanings
For the earth's mysteries;
Let us partake
Of the myriad sorrows
Floating around us.

To flush out life's malignity
Create we will
An epic sublime.

- M.A. Nuhman

விழிப்பும் இழப்பும்

கனவுகள்...... எனது கனவுகள் - அவை
கண்விழித் ததுமே போயின
மனதில் நினைவுகள் ..... சில நினைவுகள்
மறதி முன்பனி ஆயின....
நினைந்த கவிதைகள்...... ஆயிரம் - ஆற்று
நீர்க்குமிழ் போலே மறைந்தன
வனைந்த சித்திரம்...... பல கோடி
வாழ்வெனும் கல்முன் சிதைந்தன......

புன்னகை ..... இனிய புன்னகை - அது
பூத்திடும் முன் இதழ் குவிந்தது
கன்னலின் தமிழொலி தென்றலில் வருமுன்
காதினில் பேரொலி கிளர்ந்தது....
என்னுள் என்னை நான் இழந்திருக்கையில்
இந்த வுலகம் நடந்தது
என்ன நடந்ததென விழித்து நோக்குமுன்
இரவும் பகலும் முடிந்தது.....

வனத்தினில் மலர்கள்.... தினம்
வாடிட நானும் வாடுகிறேன் - என்
மனத்து நினைவுகளை - அந்த
மலர்ச்சருகிடையில் தேடுகிறேன்

THE MIRRAGE

Dreams... My dreams — they
Dissolve when eyes open
Thoughts... My thoughts
Mere fog at amnesia's touch
Poems... My poems...
Thousands in embryo
Vanish like water bubbles
Pictures... in their millions
Crushed by the boulder of life...

Smile... Sweet smile
Lips close before they blossom
Sweet Tamil melody
Riding the wings of breeze
Swamped by shattering noise...

I lose myself within me
But this world walks by
I wake up to see
Night and day marching...

Flowers in the forest fade... each day
And I too wither in unison
I search for my mind's vibrations
Amongst desiccated mass of flowers

மனிதர்கள் செய்வது தெரியவில்லை
மனதின் போக்கும் புரியவில்லை
புனிதம் நோக்கிப் போகையிலே.....
போகும் நினைவுகள் இழப்பில்லை!

- தீபப்ரகாசன்

I know not what men do
I understand not mind's ways
But in our march to the sublime...
Linger the lost memories!...

- Deepaprakasan

இயக்கம்

பிரபஞ்சத்தில் என்றோ
ஒரு துகள்
ஏன் என்று தெரியாது
ஆனாலும்
உருவெடுத்தது

காலம் உருள
துகளும் உருண்டது
பிற துகள்களுடன்
உரசி
மோதி, கலந்து
சில உறவுகள், உணர்வுகள்
பிரமைகள் அர்த்தங்கள் அனர்த்தங்கள்
இலட்சியங்கள் கொள்கைகள் வெறும் மாயைகள்
உணர்வுகளில் சிக்கல்கள்
முரண்படல்கள்
ஒதுங்குதல்
ஒதுக்குதல் சமுகம் இணக்கம் வித்தியாசம் அந்நியமாதல்
சிக்கல்கள் உபாதைகள்
சந்தோஷத்தின் சாயைகள் கீற்றுகள்
குழப்பங்கள் தெளிவுப் போலிகள்
அமைதியாக
சந்தோஷமாக
சார்புகளையும் கறைகளையும்
களைந்து
காலவெள்ளத்தில் கரையும் இத் துகள்

– கோபி கிருஷ்ணன்

MOVEMENT

In dim distant past
A speck
Took shape in the universe
Can't say why
But took shape.

When time rolled,
The speck rolled too.
With other specks
It brushed
Clashed, mingled -
Some bonds, some sentiments
Fantasies meanings absurdities
Ideals tenets illusions
            Emotional tangles
Conflicts
            Withdrawals
Rejection friendliness
            Empathy discord
            Alienation
            Snags pains
Joy's shades and streaks
Confusion fake clarity

Peacefully
Happily
Shedding leanings and stains
This speck
Dissolves in the tide of time.

- Gopi Krishnan

நிலை

அமர்ந்திருக்கும் வரப்பு

வரப்பின் மேல் சிலுக்கும் செடி.

அரக்குச் சிவப்பாய்
ஒளிரும்
மேற்குச் சிதறல்கள்.

அண்ணாந்த கண்
தொலைவில் அதிசயிக்க
வேகம் கொள்ளும் பறவைகள்.

வடப்புறத்தில் நீர்த்தடங்களாய்
முயங்கிக் கிடக்கும் உருவங்கள்.

தொலைவில் மேயும் மாடு
கன்று.

எல்லாமே ஸ்தம்பித்து நிற்கின்றன.

எங்கோ மூலையில்
கட்டிப் போட்ட
வீட்டுநாய் மட்டும்
குரைத்துக் கொண்டேயிருக்கிறது.

– நாரணோ ஜெயராம்

POSITION

Cosily seated field-ridge,

On the ridge a glistening plant,

In the west
A brilliant spray
Of ochre red,

Up above
Birds in furious flight,

In the north
Watercourses
In languid ease,

A cow grazing at a distance,
And a calf,

All frozen in silence.

In some corner
A watchdog
In chains
Keeps barking aloud.

- Narano Jayaram

தரிசனம்

தூங்கிய குளத்தில் வீசிய சிறுகல்
திருட்டுத் தனமாய் நழுவும்
கண்விழித்த அலைகள்
காலைச் சென்று தழுவும்

தந்தி மரத்தில் வந்தமரும் சிறுபறவை
அதன் மென் கால் விரல்கட்டும்
சேதி மறைத்து மேனி நெளித்து
ஊர்வலம் போகும் சிறுகம்பி

நீண்ட தண்டில் நிமிர்ந்த மலரில்
வந்திறங்கும் கருவண்டு
கிழக்கு மேற்காய் தலையாட்டி
மறுத்துச் சிரிக்கும் சிறுபூ

இந்த இயக்கங்களின் பௌதிகம் புரியும்
உன் நினைவு தாக்கிய தருணங்களில்

- பாலா

REVELATION

A little pebble thrown
Into the sleepy pond
Slides in stealthily.
Waves waking from slumber
Gently caress the feet.

A little bird perches
On the telephone pole
Hiding the message
From its dainty little claws
And wriggling its own body
Continues its journey -
The thin resolute phone wire.

The black beatle
Lands on the flower
Abloom at the tip of a slender stalk
Swaying its head
This way and that
Fusses with a smile -
The little flower.

Rare moments
Of emotional resonance
Unveil the secrets
Encased in these stirrings.

- Bala

சந்தை

வேதம் விதித்தபடி
மனைவியுடன் மகிழ்வதெப்படியென்று
மடத்துறவியொருவன் அசாத்யங்களை விற்றிருந்தான்.
கைதட்டினார்கள்.
கட்டிய வேட்டியை விலைபேசி
இன்றைய கந்தலை நாளை பட்டாக்கும்
இருபது வழிகளை விற்றானொருவன்
கைதட்டினார்கள்
புலரியில் விதைக்க இரவில் கனிதரும்
விஞ்ஞான மரங்களை விற்றானொருவன்
கைதட்டினார்கள்
போலிமது விற்றுப் பெரும்புள்ளியானவன்
ஊறுகாய் விற்று உழைப்பாலுயர்ந்த உத்தமர்
விருது வாங்கினான் விலைக்கு
கைதட்டினார்கள்.
அரிதாரம் பூசிக் கூத்தாடுமொருவன்
அவதாரமான கதையை விற்றான்
கைதட்டினார்கள்
ஒட்டு வியாபாரியொருவன்
ஊமைத்தங்காய்களை ஆப்பிள்களாக்கும்

THE MARKET PLACE

How
To live happily with your wife
In line with Vedic dictates -
A fake saint
Peddling the formula.
They applauded.

Sell off the dhoti on you
Convert the rag into silk next morn -
Another drummed up twenty formulae.
They applauded.

Plant at break of dawn
Reap at nightfall -
The third vended a GM tree.
They applauded.

A bigwig through fake liquor route
A pickle-magnate rising by honest toil
Bought some awards.
They applauded.

An actor with a heavy coat of paint
Sold the story of his incarnation.
They applauded.

வாக்குறுதியை விற்றுக் கொண்டிருந்தான்

கைதட்டினார்கள்.

அவர்கள் கைதட்டிக் கொண்டேயிருந்தார்கள்

- லாவண்யா

A hybrid vendor
Sprayed his assurance
Of getting apples out of datura plant.
They applauded.

They constantly keep applauding.

- Lavanya

கிளிகள் கிளிகள்

முகம் திரும்பிய மலராய்
அவளுக்கு என்மேல் கோபம்
திடீரென்று இன்று காலை முதல்

எனக்குப் புரிகிறது
இந்த மாதிரிக் கோபம்
ஏதாவொரு விஷயத்தில்
எதிர்ப்பைக் காட்ட
மட்டும்தான் என்று

இருந்தும் தெரியவில்லை
எந்த இடத்தில்
எப்போது நான்
தவறு செய்தேன்

இரவு வரை எல்லாமே
சரியாக இருந்ததே
சாதாரணமாகத் தானே
படுக்கவும் போனோம்
முக்கியமாகக் காரணம்
தெரியாமல் போனால்
கோபத்திற்கு என்ன
பயன் இருக்கும்

ரொம்பவும் யோசித்தும்
காரணம் தெரியவில்லை
அவளிடமே கேட்டேன்
நேற்று மாலை ரொம்பவும்
காலந்தாழ்ந்து வந்ததற்கு

PARROTS PARROTS

Like a flower turning its face away
Suddenly since morning
She was angry with me.

I understood
Such anger
As a mere protest
Against something.
I couldn't figure out
Where
When
I had faulted.

Till night
All seemed fine
Hit the bed
As but usual
If the cause
Is a mystery
Of what avail
Is anger.

Thought hard
No cause in sight
And I asked her
'Came home so late
Last evening

அவசியமேயில்லாமல் என்னை
காக்கவும் வைத்ததற்கு
கட்டிப் போட்ட பசுவாய்
இங்கு ஒருத்தி இருப்பது
எப்படி மறந்து போகும்

எனக்குள் வியப்பு
ரொம்பவும் சரி
அதற்கு அப்போதே
அல்லவா கோபம்
வந்திருக்க வேண்டும்

அப்போது ரொம்பவும்
களைத்து வந்ததினால்
இப்போது விட்டுவிட்டு
காலையில் பார்த்துக்
கொள்ளலாம் என்றுதான்

மேலே பார்த்தேன்
பறந்து செல்லும்
கிளி ஒன்றைத்
துரத்திக் கொண்டு
இன்னொரு பச்சைக்கிளி.

- ஆர். ராஜகோபாலன்

Made me wait
With no concern
No thought spared
For the lonely woman-
A cow in tight leash.'

I was surprised
Okay perhaps
But
Anger should have surfaced
Then itself.

You had come
Visibly exhausted
Kept it aside
For a fresh tomorrow.

I looked up
A parrot in flight
Another in chase.

\- R. Rajagopalan

கதவு

கதவு
உளுத்துப் போன
வாசற் கதவை
உடைத்தெறி என்றனர்

பழசு, பா துகாப்பற்றது
அழகும் அலங்காரமும்
இல்லாததென -

பாட்டி தொட்டுத்
திறந்து மூடியது
லட்சம் தடவைகளாவது

கதைகள் சொல்லி
முதுகு வருடி
தூங்க வைத்த
கைகள் அவை.

வெளிறிய முகத்தோடு
வீட்டுக்குள் ஓடிவந்த
வஹாப் சாயபு தப்பியது
சாதாரண நிகழ்வல்ல
சரித்திரம் -

சரஸ்வதி பிள்ளையார்
அய்யப்பன் முருகன் படங்களை
அவசரமாய் ஒதுக்கி
மூலையறையில் பத்திரப்படுத்திய
தாத்தா உயரமானவர்.
தாளிட்ட கதவைத்

THE DOOR

The door -
The entrance door rotted
Smash and throw it
They said.

Old, no protection
No form no glitter -
Their case

Paatti's touch
To open to close
Countless times

Those hands -
Stroking the back
Telling stories
Putting us to sleep.

Wahab Sahib
Scampering into the house
With an ashen face
And escaping death
Not a mere incident
It was history -

Saraswathi Vinayaka
Iyappan Murugan pictures

தட்டிய கொலைக்கும்பல்
கலைந்து போக
வெகு நேரமாயிற்றாம் -
நூறு வயது வாழ்ந்த
நேரம் கொண்டகிழம்
தொட்ட கதவு

அடிக்கடி கோபித்து
உலகம் வெறுத்ததாய்
வெளியேறிய போதெல்லாம்
கேலியாய்ச் சிரிக்கும்.

அதன்மொழி
அப்பாவிற்குப் புரிந்ததில்லை
அம்மாவிற்குக் கொஞ்சமாய்
எனக்கு மட்டும் முழுதாய் -

எதிர்வீட்டு பத்மாவைச்
சாய்த்து முத்தமிட்டபோது
அவளைவிட வெட்கப்பட்டது
கதவு
ரகசியம் காப்பதிலும் கவனம் -

உடைத்துப் போடச் சொல்லும்
ஒவ்வொருவர் குரலும்
கேட்காமலில்லை அதற்கு.

உறவின் எல்லை
வானம் தாண்டியும்தான்
அது புரிந்த நான்
அர்த்தம் தெரியாத அவர்கள் -

Quickly cleared
In the corner room -
Thaththaa a man of stature.
It took long it seems
For the murderous gang
Slamming the shut door
To disperse -
The door
Savoured by the touch
Of a hundred-year old
Patriarch laden with love.

Whenever
In the grip of rage
In seeming disgust with life
I stormed out of house
It giggled in jest.

Its language
Escaped Appa
Amma knew a little
And I in full -

When I leaned against
Neighbour Padma
And planted a kiss
More than her
Blushed the door -
Good at guarding secrets too -

Every voice
Yelling for its destruction.
Didn't escape it.

The bound of bond
Stretches beyond the sky.

தூரத்தில் கேட்கும்
வேசான முனகல்
கதவின் சிரிப்பு
எங்குமாய்.

- நா. விச்வநாதன்

Know did I
But the meaning beyond them -

A gentle moan
From a distance
The door's smile
Everywhere -

- Naa. Vichvanathan

புழு

நட்ட நடுச்சாலையில் ஒரு புழு.

என்னை வியக்க வைத்தது:
பயம், பதற்றமற்ற நிதானமான அதன் நடை.
வேட்டையாடாது, வியர்க்காது
இலைகள் தின்று உயிர் வளர்க்கும் அதன் வாழ்க்கை.

இயற்கை மத்தியில்
தன்னுள் ஆழ்ந்து
தானே ஆகிய கூட்டில்
சிறகு முளைக்கும்வரை புரியும் தியானம்.

சிறுகுச்சியொன்றைக் கையிலெடுத்து
அதைச் சீண்டுவேன் விளையாட்டாக;
பயம், பதற்றத்தை நான் அதற்கு ஊட்டுவேன்
சிறுவயதில்.

அது துன்புறுவதை அறியாத ஆய்வு ஆர்வம்.
சிறுவயதினுள் பெருவயதின் குரூரம்.

- தேவதேவன்

THE WORM

A Worm
At the very centre of the road.

It amazed me:
Its languid movement
Fearless and unperturbed.
No hunting, no sweaty toil
Leisurely repast of leaves
Sustains its life.

Immersed in itself
In nature's embrace
With its body as its shell
In deep penance till a sprout of wings.

In boyhood days
I had playfully hassled it
With a twig in hand
Provoking fear and shudder.

An impish curiosity
Not knowing its pain.
Cruelty of grey years
At that tender age.

\- Devadevan

வண்ணம்

மணற் பரப்பு
இடை இடையே, காலடித் தடயங்கள்
அடுத்தடுத்து
பெரியதாய் சிறியதாய்
மூடி மறைத்ததாய்
நெறி நெறியாய், குறுக்குக் கோடாய்
இடையில் நெறிபட்டதாய்
அமுக்கப்பட்டதாய்
அமுங்கிப் பழகியதாய்
முக்கம் புதியதாய் மூச்சடைக்க
இறுகி முழி வெளிப்பட

யார் தடம்?
யார் நிலை யார்?
யாருடன் யார்
யாரில்லாமல் யார்
குருவசம் யார்
வசமாய் குருவிடம் யார்?
ஆனால் -
எல்லாம் பாதி பாதியாய்
தசை திரும்பி திசை திரும்பி,
வெறும் கால்கள் எங்கே?

- க்ரிஷாங்கினி

FOOTPRINTS

An expanse of sand
Scattered footprints
In clusters
Big and small
Some partly covered
In waves
In criss-cross patterns
Stifled in between
Struggling to sneak up
Repressed
Used to repression
Choked by new pressures
Eyes popping up...

Whose footprints?
Who in whose print?
Who with whom
Who without whom
Who in search of a guru
Who in a guru's hold?

But -
Everything hacked and parted
Changing course
Switching directions,
Where are the bare feet?

- Krishangini

உயிர்

வெட்டி வைத்த பூவரசுக் கொம்பு
தளிர் விடும்
தண்டவாளங்களின் நடுவே
மூஞ்சி எறிந்த
கொட்டை முளைக்கும்
பாறையிலும் வேர்விடும் சிற்றால்
இறந்த பெண்ணின் கன்னிக் குடத்தில்
வளரும் சிசு.

- நாஞ்சில் நாடன்

THE LIFE

Plant a Portia stick
It sprouts

A mango nut
Sucked dry
And tossed between the rails
Springs to life

A miniscule banyan seed
Burrows through
Rock's crevice
And shoots out

In the womb
Of a dead girl
Foetus dons a smile.

- Nanjil Nadan

*

விடுமுறை நாளில்
இறந்து போவதைத் தவிர்த்து விடலாம்

பரபரப்பில்லாமல்
தாமதமாய் எழ முடிகிறது
குடும்பம் குழந்தைகளோடு
சின்னச்சின்ன சண்டையிட முடிகிறது
வேண்டாத உரோமம் அகற்ற
ரேஸரை குளியலறைக்குள் கொண்டுபோய்
ஆற அமர காரியம் நடத்த முடிகிறது
செய்தித்தாள் புத்தகங்களை
பழைய பேப்பர் கடைக்கு நகர்த்த முடிகிறது
நிதானமாய் உணவருந்த முடிகிறது
நீர் அருந்தவரும் பறவைகளை
தோட்டத்தில் கவனிக்க முடிகிறது
மதியம் உறங்க முடிகிறது
எல்லாவற்றையும்
சுதந்திரமாய் கலைத்துபோட முடிகிற நாளில்
இறந்து போவதை தவிர்த்து விடலாம்

– பூமா ஈஸ்வரமூர்த்தி

WOULD RATHER NOT DIE ON A HOLIDAY

Would rather not die
On a holiday

That's when I can
Wake up leisurely
Hasslefree
Have little quarrels
With wife and kids
Settle comfortably in the bathroom
Razor in hand
And remove unwanted hair
Carry newspapers, books
To the old paper shop
Relish my lunch
In languid peace
Laze around
And watch little birds
Dip their beaks in the garden pond
Enjoy a leisurely nap

It is a day of freedom -
Freedom from order, from routine

Would rather not die
On a holiday

- Booma Eswaramoorthy

தொடர்ந்து......

.... கொள்கலங்களைப் பார்த்துப் பார்த்துத்
தேய்த்துக் கழுவுகிறேன்
திரும்பவும் சமைக்க.
சுத்தம் செய்கிறேன் இடங்களை
அசுத்தப் படுத்தவென் று.

காலி செய்கிறேன் மீண்டும் நிரப்ப
தொலைவதற்கென் று நட்புகளை
மீட்டெடுக்கின்றேன்
மறு உபயோகத்துக்காகத்
துணிகளைத் தோய்த்தெடுத்து.

தினப்படி சாவுக்கென் று
மறுபடியும் பிழைக்கிறேன்
காலைகளில்.
எப்போதோ வரப்போகும்
சந்தோஷத் துளிக்காக
எப்போதும் துக்கம் சுமந்து.....

மறுநாள் பசிக்கும் கூட.....
இன்றே உழன் று உழன் று.....

\- மாலதி

THE CONTINUING GRIND

...With consistent deliberation
I wash utensils
To cook again
Clean places
To dirty again

Empty, to fill up again
Reclaim friendships
To lose again
Soak clothes
To wear them again.

For each day's lingering death
I rise alive
Each morning.
For droplets of joy
Of an unknown day
Bearing the cross of
Daily sorrow...

For the tomorrow's hunger
Endless grind of today...

- Malathi

காயம்

காயம்பட்டவனின்
குருதி கதறிற்று
'கல் எங்கிருந்து?'
யேசுவின் சொல்லிற்கு
கை நெகிழ்ந்தோர்
விட்டுச் சென்ற
குவியலில் இருந்து.

- சு. வில்வரத்தினம்

THE WOUND

The blood of the wounded
Wailed
'Where from this stone?'

From the pile
Left behind
By the hesitant hands
Touched by Jesus's words.

- Su. Vilvaratnam

இருந்த இடத்தில்

இருந்த இடத்தில்
இருந்தபடியே
நீ இரு
நான் வருவேன்
உன் கால்களை வருடிச் செல்லும்
நீரெல்லாம் கழிந்த பின்னே

- ஆனந்த்

IN THE SAME PLACE

Stay
Where you are
As you are

Come I will -
Let
All the waters
Lapping your feet
Drain away.

- Anandh

மறுபக்கம்

தரையில் நான்
சுவரில் பல்லி
தொங்கும் விளக்கால்
ஆடும் நிழல்கள்
மங்கும் ஒலிகள்
மாலை இருளில்
தொலைவில் கேட்கும்
குழந்தையின் அழுகை
இருளில் கேட்கும்
குழாயின் ஒழுகல்
அறைக்குள் காற்றில்
வண்ணப் பூச்சிகள்
குறுக்கே பறக்கும்
வினாடிப் பிளவில்
அணைக்கும் இருளில்
சிரித்துக் கொண்டு
வானில் மிதக்கும்
கோலப் புள்ளிகள்
இடப்பெயர்ச்சி
சுழற்சியின் நடுவே
தரையில் பல்லி
சுவரில் நான்

- ஆத்மாநாம்

THE OTHER SIDE

Me on the floor
Lizard on the wall
Hanging lamp
Dancing shadows
Fading sounds
Greying evening
From some distance
A child's cry
Sound from the dark
Of a dripping tap
Flitting across the room
Colourful insects
In the slice of time
Shooting across
Spraying laughter
In night's embrace
Specks of living light
Floating in the sky
Amidst this whirl
And churn of space
Lizard on the floor
Me on the wall.

- Atmanam

தவம்

கடலின்
தரைபரவும் ஆழத்தில்
வாய்திறவா சிப்பிகள்;
கொடியில்
நுனித்தண்டு அசைவினிலே
குனித்தமுக மொட்டுக்கள்;
மனதின்
புதைகுழிப் பொறுமலிலே
கவிதைக்கரு வித்துக்கள்.
சிப்பிகள்-
முத்துக்களை உமிழவில்லை.
மொட்டுக்கள் -
இதழ் விரித்துச் சிரிக்கவில்லை.
வித்துக்கள் -
கவிதையுருக் கொள்ளவில்லை.

ஏதோ ஒரு கரத்தின்,
ஏதோ ஒரு காற்றின்
ஏதோ ஒரு ஒளியின்
ஸ்பரிசத்துக்காகத்
தவம் இருக்கின்றன.

- கோ. ராஜாராம்

PENANCE

In the inky depths
Of the sea bed
Shells with mouths shut;
In the gentle sway
Of the slender creeper
Buds yet to blossom;
In the expectant rumble
Of the mind's recesses
Seeds of poetry;
Shells -
Did not release pearls.
Buds -
Did not blossom into smile.
Seeds -
Did not crystallize into poetry.
    They are in deep penance -
    For the gentle touch of
        Some hand
        Some breeze
        Some light.

- G. Rajaram

மாற்றான் தோட்டம்

காலை நேரம்
சூரியகாந்தித் தோட்டம்
கிழக்கிலிருந்து பார்த்தேன்.

தோட்டத்தின் எல்லா முகங்களும்
என்னைத்தான் நோக்குவதாக நோக்க

சுள்ளென்று என் பிடரியில்
சூரியச் சிரிப்பின்
கெக்கலி.

அக்கணம்அவ்விடம் நான்
ஒரு கோமாளி போல்.

- ராஜ சுந்தரராஜன்

NEIGHBOUR'S GARDEN

A bright morning
A sunflower garden
See I from the east.

A forest of faces in the garden
Glued to me I fancy.

And
Falls on my nape
Sun's disdainful laughter.

That moment
At that spot
I stand like a clown.

- Raja Sundararajan

என் வீட்டு சூரியன்

என் செல்ல மகளே!
விவாகம் ரத்தானால் ரத்தாகுமோ தாய்மை?
ரத்தாகுமோ தொப்புள் கொடியால் இணைந்த நம் உறவு?
சொல்வேன் என் வீட்டுச் சூரியனே!

உன் விரல் இறைக்கும் கோலப்பொடியில்
ஜனிக்கும் கோணற்கோடுகளின் துணையின்றி
வாசல் நிறைத்த வண்ணப்பூமாக்கோலம்
வெறுமையாய் வெறுமையாய் வெறிச்சோடும்

தோட்டத்து ரோஜாக்கள்
உன் சுவாச ஸ்பரசங்களின்றி
பார்வை முத்தங்கள் அற்று
பூத்ததும் வாடி வதங்குகிறது.

என் இனிய பூச்செண்டே! இப்போதெல்லாம்
சோப்புப் பெட்டியில் தண்ணீர் தங்குவதில்லை
ஷாம்புவும் பெர்ஃபியூமும் முடிகளை இழப்பதில்லை
படுக்கை நனைவதில்லை
வரவேற்பறை குலைவதில்லை
என் சேலையும் ப்ளவுசும்
உன்னால் இழுபட்டுக் கிழிவதில்லை
ஏனிந்த அநியாயம்?
முனைகள் முறியா லிப்ஸ்டிக்குகள்
கலைந்து சிதறா கிரேயான் பெட்டிகள்
கிறுக்கல்கள் அற்ற தூய சுவர்கள்
மூடிகள் சரியாகப் பொருந்திய பௌடர் டப்பாக்கள்
என் செல்லமே எதிற்கிந்த அலங்கோலம்?

THE RADIANT SUN OF MY HOME

My darling daughter!
Annulled marriage -
Can it annul motherhood?
Can our umbilical bond
Snap?
Tell me -
The radiant sun of my home!

Absent those crooked lines
Born of the kolam powder
Scattered by your delicate fingers
The splendid floral kolam in the yard
Lies lifeless and barren.

The roses in our garden
Blossom only to wither
Without the caress of your breath
Without the kiss of your eyes.

My dear dear bouquet!
These days -
No residual water in soapcases
Shampoo and perfume bottles
Lose not their lids
No wetting of mattresses
Living room all clean and tidy
My sarees and blouses

ஓடி வந்து கால் பிணைக்கும் உன் கைகளின்றி
வீடு சேர்ந்ததும் தடுமாறாத என் கால்களால் என்ன பயன்?

முதல் வாய்க்கு அடம் பிடிக்கும் நீ இல்லாமல்
என் விருப்பம்போல சூடாய் மேசைக்கு வரும்
உணவில்தான் என்ன ருசி?

சரிதானா கண்ணே?
நீ கேட்டு இதுவரை நான் தராது போனது
கையகல சூர்யகாந்தி ஒன்றுதான்.

ஆனால் இன்று
உன் சின்னச் செருப்பையும்
சில்க்குப் பாவாடையையும்
கண்டு தலைதிரும்பும்
சூர்யகாந்தியாய் நான்.

பேச்சு மூச்சற்ற உன் ஆர்மோனியத்தையும்
தொட்டிக்குள் மீனையும் தொழுவில் நாயையும்
தொல்லை தரும் பூனையையும் உன் நினைவாய் என்
நினைவில்
கண்டு கலங்கும் சூர்யகாந்தியாய் நான்.
திசைகள் அறியாது நிமிரத் தெரியாது
என் நினைவில் தாலாடும் உன் கனிவில்
சுடரும் சூர்யகாந்தியாய் நான்.

Not torn by your pulling -
Why this misfortune, my dear?
Lipsticks without snapped ends
Crayon boxes not messed up
Walls without graffiti
Talcum powder cans neatly closed -
Why this unseemly mess, my dear?

On reaching home
My legs do not totter
On the eager clasp of your loving hands -
What use of these legs?

Without your clamour for the first morsel
What taste in this food
Reaching hot to the table
At my bidding?

Do you recall?
Your one wish I had not fulfilled -
A sunflower in full bloom.

But today
I am but a sunflower
Training its eyes
On your little slippers
On your silk skirt.

அதனால்தானோ என்னவோ இன்று
என்னையும உனக்குத் தர
இயலா சதிக்குள் சிறைப்பட்டுக் கிடக்கின்றேன்.

ஆயினுமேயென்ன -
என் வீட்டுச் சூரியன்
என் முற்றம் வரும் நாளுக்காய்
வசித்திருப்பேன் சுவாசித்திருப்பேன்.

- திலகவதி

Your harmonium lying still
Fish in rainbow hues in the bowl
The cuddly puppy in the yard
The naughty pussy cat -
I am but a sunflower
Looking at these with moist eyes
In your fond memory.

I am but a sunflower
Drooping with a wilting stem
But enlivened by your sweetness
Treasured in my soul's depths.
But today
I am a helpless prisoner
Victim of a plot that blocks
Me from giving myself unto you.

Mark my word, my little princess!
For the glorious day
The radiant sun of my home
Touches my portal
I shall live
I shall breathe.

\- Tilakavathi

*

வியந்து வியந்து போயிற்று காலம். குகையினுள்
நுழைந்து அதன் மட்டி மணத்தில் புலன் நிறைந்தது.
பிறகு மூக்குக்குள் நுழைந்த எதுவும் பதிவாகவில்லை.

பயந்து பயந்து போயிற்று காலம். தட்டு வெட்டிமுடித்த
சோளக்காட்டுக்குள் பார்த்துப் பார்த்து நடந்து
திரும்பி வந்த பிறகு பாதம் பரிகசித்தது.

நொந்து நொந்து நடந்தது காலம். ஓடி ஓடித் துரத்தி
ஒரு அடி இடைவெளி விட்டு திரும்ப நின்று கொண்டு
முகம் பார்த்துச் சிரித்தது முயல். சொல்லவும் முடியவில்லை.
தின்னவும் முடியவில்லை.

கொடுத்துக் கொடுத்து மாய்ந்தது காலம். ரசித்துப் பார்த்து
ருசித்து முடித்து பூரித்துப் போன சாயங்கால நேரத்தில்
தூரத்தில் புன்னை மரத்தை ஒட்டி
நின்றிருந்தது யார்?

– ப. கிருஷ்ணசாமி

*

The Time rolled on in waves of wonder.
Entering the cavern
Senses filled with its musty smell.
The nose could register
Nothing that entered.

The Time moved on
With step after step of fear.
Walked with gingerly steps
Across corn fields
With the jutting residual stubs
And in turn
The feet mocked at me.

The Time walked
Each step marked by regrets.
A rabbit pranced and chased
Lingered a while
Turned back and smiled.
Killing it and savouring it
Was beyond me.

The Time died
After ceaseless giving.
Enjoyed it and tasted it.
It was a fulfilled evening.
There, near a punnai tree
Stood he.
Who was he?

- P. Krishnaswami

ஒற்றைக் கனவும் அதை விடாத நானும்

கனவிலேயே இருக்கிறது அந்தக் காட்சி

ஒரு பூந்தோட்டம்
விழுந்தபடியே பூக்கள்
நனைந்தபடியே நான்
என்னைத் தடவிச் செல்லும் இசை
எனக்குள் ஓவியங்கள் வரையும் இயற்கை

கனவிலேயே இருக்கிறது அந்தக் காட்சி

உயிர் திரவமாய் ஓடும் நதி
அதில் முளைத்த மரப்பூவாய்ப் படகு
கரை ஓரம் ஆட்டுக்குட்டிகள்
மெல்ல மனசை நனைக்கும் தூறல்கள்
மலை தொடப் பார்க்கும் வானம்
வானம் சொன்ன வார்த்தைகளாய் நகரும் மேகம்
சுற்றித் திரியும் ஒற்றை மனிதனாய் நான்
என்னை நேசிக்கும் எல்லாமாய் அவை

கனவிலேயே இருக்கிறது அந்தக் காட்சி

அதிகாலை என்னை எழுப்பும் அலாரம் வரை
நீடிக்கும் கனவு அந்த நாளையே
சுகமாய்த் தாலாட்ட வைக்கும்
மாறாமல் அப்படியே
வந்து போகும் காட்சி
ஒவ்வொரு முறையும்
எனக்குத் தரும் புத்துயிர்ப்பை

A DREAM I HOLD FAST

That vision stays in my dream

A garden
A shower of flowers
Drenched I stand
Music caressing me
Nature painting pictures within me

That vision stays in my dream
A river flowing with life's essence
A boat blossoming as a wooden flower
Tiny goats prancing on the shore
A mild drizzle soaking my mind
The sky trying to clasp the hills
Clouds floating as sky's unsaid words
Me a lonely meandering man
Everything enveloping me with love

That vision stays in my dream

Till the alarm clock's rude call
The dream sings its lullaby
Charming the day in its silken touch
The vision lingers
Recharging me with its magic

That vision stays in my dream

கனவிலேயே இருக்கிறது அந்தக் காட்சி

அது நிஜத்துக்கு வராவிட்டால் என்ன?
அடிக்கடி நான் போய் வந்து கொண்டிருக்கிறேன்
கனவு சிதையாமல் இருக்கும் வரை
நான் போய் வந்து கொண்டுதான் இருப்பேன்

கனவிலேயே கிடக்கிறது அந்தக் காட்சி.

- ராஜா சந்திரசேகர்

I care not it's unreal
It's an unfailing port of call
Till the dream is shattered
I visit and revisit

That vision stays in my dream.

- Raja Chandrashekar

துப்பாக்கி

துப்பாக்கி என்றால்
என் மகள் கேட்கிறாள்
சுடுவதற்கு
யாரை
விரோதிகளை
விரோதிகள் என்றால்
எனக்கு பிடிக்காதவற்றைச் செய்பவர்களை
அப்படியென்றால்
எல்லோரையுமா
நானுமா
இல்லை
தேசத்தை அபகரிப்பவர்களை
தேசம் என்றால்
அபகரிப்பவர்கள் என்றால்
திருடர்களை
திருடர்கள் என்றால்
உனது பொருளை
உன் அனுமதியின்றி
எடுத்துச் செல்பவரை
அனுமதி என்றால்
சுதந்திரம்
ஓ அதுதான் துப்பாக்கியா

– அப்பாஸ்

THE GUN

Gun means -
My daughter asks
To shoot
Whom
Enemies
Enemies means
Those who do what I don't like
And that means
Everyone
Me too
No
Those who plunder the nation
Nation means
Plunderer means
Thieves
Thieves means
Who take away
Your things
Without your permission
Permission means
Freedom
Oh! I get it now
Is that the gun?

- Abbas

அம்மி

வேகமாய்த் திரும்புகையில்
இன்றும் காலில் இடறிற்று
கருங்கல் அம்மி.
'அரைக்கவும் ஆட்டவும்
என்னென்னவோ இருக்க
எடத்தை அடைச்சிட்டு
ஏன்தான் இருக்குதோ?'
இப்படி -
அன்றாடம் மாமியார்
கண்டனம் தெரிவித்தும்
ஆசை அம்மியை
அறுத்தெறிய மனசில்லை.

அம்மா வீட்டில் இது
சும்மாவா இருந்தது?
வெள்ளைத் தேங்காயும்
கறுப்பு மிளகும்.....
பச்சை மிளகாயும்
சிவப்பு வற்றலுமாய்......
தாள லயத்தோடு
அம்மா அரைக்கையிலே
ஆத்துக்கு அக்கரையில்
அழகருக்கும் வாயூறும்.

இன்றோ -
அவசர உலகத்தில்
அடுக்கு மாடிக் குடியிருப்பில்
பதுங்கிக் கிடப்பதற்கு

AMMI

Today too
It tripped while I quickly turned -
My granite Ammi*
"Gadgets galore
For grinding and blending
Why this monster
Blocking the way?"
Mother-in-law's
Constant refrain.
But I had no heart
To cast away
My loving Ammi.

Was it lying idle
In Amma's house?
White coconut
Black pepper...
Green chillies
Dry red chillies...
When Amma grinds
To a music beat
Even God Alagar
Across the river
Drools...

---

* Ammi - Grinding Stone

முற்றமோ? புழக்கடையோ?
ஒதுங்கிக் கிடப்பதற்கு
திண்ணையோ இல்லாமல்
கவனிக்க ஆளின்றிக்
காய்ந்திருக்கும் வெறுங்கல்லாய்
வயோதிகம் போல் அம்மியும்.
ஆயினும் ஓர் நாள் -
மழை நாள் இரவில்
மின்சாரம் தடைபட்டுச்
சிம்னி கதகதப்பில்
ராச்சோறு சுவைப்பதற்காய்
பருப்புத் துவையலதைக்
கருங்கல் அம்மியிலே
கை வலிக்க அரைக்கையிலே
வீடெல்லாம் மணந்தது
அம்மாவின் வாசனையில்.....

- வைகைச் செல்வி

But today -
In this busy world
In the concrete pigeonhole
Where is the yard
A cosy corner
For my dear Ammi?
No pial to snuggle in comfort
None to bestow attention
My Ammi was
A mere useless stone
Like old age, unwanted

But on a rainy night
With no power
Kerosene lamps blinking
Dhal chutney in demand -
I worked the granite Ammi
In joyous toil
And the house filled
With Amma aroma...!

- Vaigai Selvi

தன்னிலை விளக்கம்

மௌனம் இசையாய் பள்ளி கொண்ட
தெள்ளிய நீர்
அள்ளவும் தோன்றா கொள்ளை யழகு
உள்வாங்கும் சுவாசமெலாம் உயிர்ப்பூ வாசம்
கண்டது கண்டபடி யிருந்து வந்தேன்.
வேகமாய் வந்திறங்கிய கல்லொன்று பளிங்கு
பிளக்கக்
கலங்கிக் குழம்பியது சேறு
தெறி சினத்தில் தலையுயர
வெண்ணெய் வழிய பிரபஞ்சம் காட்டும்
வாயெலாம் பரவிய சிரிப்போடு வரும்
மயிற்பீலியொடு மறுகல்லை பயமற்று
கையகப்படுத்தியவாறு அந்தக்
குழந்தைக்கிழவன்
அழலானேன்
ஐ முக விளக்குத் தழல் வழிமுழுதும்.

\- ரிஷி

AN INTENSE EXPERIENCE

Music of silence
Cuddling limpid water.
Overwhelming beauty
Freezing my desire
To scoop a handful.
Breath suffused with
The sheer aroma of the life-flower.
I sat, lost in a trance.

A stone came flying
Broke the vast crystal sheet
Turning it into a muddy mess.
Raised my head in fury.

Lo and behold!
His mouth a mess of butter
But the abode of the universe
A charming smile dancing on his lips
The peacock feather swaying
With another stone
Poised for release-
The Cosmic Child Krishna!

I broke into a sob of ecstasy
In the embrace of the lustre
Of a sacred lamp.

- Rishi

சாத்தியங்கள்

கிளையிலிருந்து உதிரும்
இலையின் முனகல் புரியுமா?
எனில்
மரத்தின் வரலாறு தெரியும் உனக்கு.

சிறகிலிருந்து பிரியும்
இறகின் அலைச்சல் அகப்படுமா?
எனில்
பறவையின் சுதந்திரம் வசப்படும் உனக்கு.

மேகத்திலிருந்து விலகும்
துளியின் நீர்மை உணரக் கூடுமா?
எனில்
நதியின் ஜாதகம் சாத்தியம் உனக்கு.

சொல்லிலிருந்து வெளியேறும்
மௌனத்தின் குரல் கேட்கலாகுமா?
எனில்
கவிதையின் ஜீவிதம் புரியும் உனக்கு.

- சுகுமாரன்

POSSIBILITIES

Do you discern
The moan of the leaf
Falling from a branch
Then
You know the tree's history.

Do you sense
The lament of the feather
Parting from a wing
Then
The bird's freedom is yours.

Do you feel
The wetness of the drop
Leaving the cloud's womb
Then
You know the secret of rivers.

Do you hear
The voice of silence
Emerging from the word
Then
You understand poetry.

- Sukumaran

*

அடர்ந்த காடுகளிலும்
மலைச் சரிவுகளிலும்
பாலைவன வெப்பத்திலும்
நகரத்தின் நெரிசல்களிலும்
கிராமத்தின் அமைதியிலும்
என் கரம் பற்றி
வழி நடத்திச் சென்ற
அரூபமான
அந்த மாயக் கரத்தின்
விரலுக்கு
இந்தக் கணையாழி

- காவியா

*

Through

Dense woods
Hill slopes
Desert heat
City bustle
Village calm

Held my hand
Led me on

To the finger
In that invisible
Magical hand

This signet ring!

- Kavya

*

நால் வீதிக்குள்ளே பல நூற்றாண்டுகள்
சிந்திக் கிடக்கின்றன
பொறுக்குவாரின்றி நேரமின்றி
புவனத்தின் புள்ளியில்
போகின்றது வருவது எல்லாம்
பதித்துவிட்டுப் போகும்
காலத்தின் முதுகரங்கள்
கைதொட்ட கருங்கற்கள்
கதைசொல்லிப் பரந்து நிற்கும்
வாழ்கின்ற தலைமுறைக்குள்
வாழ்ந்த தலைமுறைகள்
வழிவழியாய் நினைவில் படிவமாகி
வீதிவழி போகின்ற உருவமாகும்
வற்றாத நினைவுகள்
வளங்கொழிக்கும் வயலரங்கம்
தூக்கத்தில் தொடர்கதையாய்
திகழும் உயிரரங்கம்.

- ஸ்ரீரங்கம் வி. மோகனரங்கன்

*

Within the four streets
Centuries lie scattered
None to collect the fragments, no time.
On this dot on the globe
Flotsam and jetsam of ages
Leave their imprint.
Granite stones
Fashioned by Time's ancient hands
Witnesses to stories long past.
Past generations
Buried in the present.
Etched as ethnic metaphors
Embodied forms walk the streets.
Fields fertile
With lingering memories.
A stage of pulsating life
A panorama of unbroken dreams.

- Srirangam V. Mohanarangan

ஒரு பகுதிக் கனவு

எல்லாமே மறந்துபோக
நினைவில் தங்கியிருப்பது
மிக நீண்ட கனவின்
ஒரே ஒரு பகுதி

மரங்கள் அடர்ந்த காடு
கீச்சுக்கீச்சென இசைக்கும் பறவைகள்
விசித்திரமான வால்களுடைய குரங்குகள்
எங்கோ இடம்பெயர்ந்து செல்லும் யானைகள்
சாரலுடன் விழும் இனிய அருவி
துறுதுறுவென அலையும் வண்ணத்துப் பூச்சிகள்
இரை விழுங்கிய பின்னர் அசையும் மலைப்பாம்பு
இரு கிளைகளின் இடையே
அசையும் ஓர் ஊஞ்சல்

எவ்வளவோ யோசித்துப் பார்த்தும்
வேறு எதையுமே காட்சிப்படுத்த இயலவில்லை
ஊஞ்சலின் ஆனந்தம் உணர்ந்தபின்
எஞ்சிய கனவு அவசியப்படவுமில்லை

- பாவண்ணன்

PART OF A DREAM

A long dream
A fine tapestry
Everything dissolved
Leaving but a fragment
Etched in memory.

A forest dense with trees
Birds galore
Singing a medley of tunes
Monkeys with exotic tails
Itinerant elephants
In search of pastures new
Waterfalls spraying charm
Butterflies busily flitting
An overeaten python
In languorous repose
A swing swaying
Between two branches

I think back furiously
Nothing else can I capture
In my mind's eye

After savouring
The ecstacy of the swing
The residual dream
Tapered off.

- Paavannan

பாதரஸ சிலை

சிதறி விழுந்த கனவுகளைத்தான்
சேகரித்துக் கொண்டிருந்தேன் நான்
சிற்பியிடம் சேர்க்க.
சொல்லியிருந்தான் சிலைப்பவன்
'சேர்த்து வா சிலை வடிக்கலாம்'
பாதரஸமாய்ப் பிடிபட்டுத்
தெறித்துச்
சிதறிய கனவுகளை
கயிறு கட்டி சேர்த்துக் கொண்டிருந்தேன்
சேர்த்ததை
சோதித்தபோது
தெரிந்தது

வால் ஒட்டிய பெண்முகம்
ஒற்றைக்கால் சதங்கை
கயிற்றில் சிக்கிய கணுக்கால்
காதோரத்து நரை
திறந்த மணல் புத்தகம்
ஆயிரமாயிரம்
முடமறுக்கும் வாய்கள்
அதில் முனை மழுங்கிய வாள்
காமத்துடன் காகம் ஒன்று
கோபுர வாயில் நான்கிலும் எருமைகள்
கூடவே
ஏழுமலையானுக்கு சார்த்திய
வைரக் கிரீடம்

A MERCURIAL STATUE

I was collecting
The scattered dreams
To reach to the sculptor.
He had told me
"Collect and bring them,
We'll sculpt a statue."

Dreams
Slippery as mercury
Scattered as smithereens -
I was stringing together.
I checked
The heap.
Lo and behold!

A woman's face with a tail
Dance bell-string of only one leg
An ankle trapped in a rope
Grey hair at the temple
Open book of sand
Resolutely open mouths
In their thousands
A blunted sword stuck in it
A crow in the grip of libido
Buffaloes at all four temple gates

அறுத்தது நூல் கயிறு
என் வண்ணச் சேர்க்கை
விரல் இடுக்குகளில் வழிய வழிய
சென்றேன் சிற்பியிடம்
முறையிட.

- ரெங்கநாயகி

Also
A diamond crown
Dedicated to
The Lord of the Seven Hills.

The cotton string snapped.
My rainbow collection
Dribbling through my fingers
I went to the sculptor
To bemoan.

- V. Renganayaki

*

காரணமில்லாத கோபம்
காரணமில்லாத வருத்தம்
காரணமில்லாத ப்ரியம்
காரணமில்லாத எதிர்பார்ப்பு
காரணமில்லாத காத்திருப்பு

இதையெல்லாம் விட்டால்
என்னதான் காரணம்
வாழ்வதற்கு?

- இரா. ஆனந்தி

*

Without a reason
    Anger
    Sorrow
    Love
    Expectation
    Waiting

Renounce all these –
What at all is the reason
For living?

- Era. Ananthi

சோர்ந்தேன்

மகன்
கம்ப்யூட்டரில் அருவியில்
குளித்துக் கொண்டிருந்தான்.....

பம்ப்செட்டில் ஏறி
கிணற்றில் குதித்து
மண் எடுத்த கதை சொன்னேன்.

கிணறு
எத்தனை லாரி தண்ணீர்
பிடிக்குமென்றான்?

- ராசி அழகப்பன்

WHAT A CHANGE!

My son-
Immersed in the torrent
From his computer.

I told him my story -
Standing on the pump hut
Plunging into the well
And retrieving sand
From its depth.

Eyes glued to his computer
He asked:
"Appa !
How many tanker-loads of water
Make a well?"

- Rasi Azhagappan

*

நம்பிக்கைகள் இற்றுவிழ
தற்கொலையின் விளிம்பில் நின்று
மனம் அலறிய சமயம் வந்தது பெருமழை

ஹாரன்கள் வீறிட தேங்கிய நீரை வாரியிறைத்து
விரைந்து மறைந்தன வாகனங்கள்
ஈரம் வடிய மெல்ல நகர்ந்தன மாடுகள்
பாரம் இழுத்து
குடைகளுக்குள் ஒடுங்கியும் குடைகளற்றும்
நனைந்து பரபரக்கும் மனிதர்கள்
சாம்பல் ஒளியில் நனைந்து நிற்கும் மரங்கள்
அடைக்கலமின்றி கிளைகளில்
ஒன்றிக் கீச்சிடும் குருவிகள்
தலையில் புத்தகப் பை படிந்து தொங்க
சகதி நிறைந்த சாலையில் மெல்ல அடிவைத்து
பூ உதிர வரும் சின்னப் பெண்
அலறல் அடங்கி ஓய்ந்தது மனம்
வாழலாம் இன்னும் ஒருநாள்

– சேஷையா ரவி

*

With hopes crumbling
At the very edge of suicide
Mind in a whirl -
Arrived the downpour.

Horns blaring
The vehicles sped past and vanished
Splashing water in puddles,
Bathed in rain
The bullocks trudged along
Pulling their load,
Men scampering
Some huddled under umbrellas
Some merely getting drenched,
Trees dripping in grey light,
Screeching sparrows
Shelterless amongst branches,
With school-bag
Drooping from her head
Gingerly walking on the muddy road
Was a sweet little girl.

Turmoil abated
Mind was calm
May as well live
For one more day.

- Seshiah Ravi

*

நான் அறிய இயலாத உன்னை
வணங்கி வழிபடச் செய்தார்கள்
முதன் முதலில்

பின்னால்
உன் அசைவுகளின் அற்புதமெனை
ஆட்கொள்ள
என் இயக்கம் தொடங்கியது.

நீயும், நீயில்லாத வேறொன்றும்
என்னுள் தோன்ற
இவ்வியக்கம் வலுவடைந்தது.

சில யுகங்களை நீயில்லாத அந்த
வேறொன்றில் கழித்து மகிழ்ந்தேன்.

என்றாலும்
என் உணர்வு மையத்தில் உன் தோற்றம்
நிழலாடுகிறது.

காட்சிகளைனைத்தும் அதனுட் புகுந்து
காண்பதாகிறது.

காண்பதின் நுணுக்கம் கலையென
ஆனது.

காண்பதை காண்பதில்
நான், என்னது, அவனிவள், அவையிது

*

At the very beginning
They made me worship you
While I knew you not.

Then
The splendour of your movement
Overwhelmed me
And my vibration was born.

You and some other non-You
Sprouted within me
Stirring up the vibration.

Spent a few epochs
In the other non-You
And rejoiced.

Still
I feel your presence
In my core.

Whatever I see
I see it
Seeped through you.
Nuances of what I see
Turn into art.

ஏன், எது, எப்பொழுதெப்படி
என்பதனைத்தும் இல்லாமற் போனது.

பின்னும்
இவ்வியக்கம் தொடர்கிறது

- ஜெயதேவன்

In seeing what I see —
I, mine, he, she, those, this
Why, what, when, how -
Everything dissolved out of sight.

Still
The vibration
The movement
Continues.[*4]

- Jayadevan

தலித்

இந்(து)தப்
பார்ப்பன மந்திரம்
திருநீறு பூசியது
கீதையைத் தந்தது
இந்து என்றது

இந்த
ஞானஸ் நானம்
சிலுவையைக் குறியிட்டது
பைபிளைத் தந்தது
கிறித்தவன் என்றது

இந்த
கலிமா
என்னை சுன்னத் செய்து
குல்லாவை அணிவித்தது
குர்ஆனைத் தந்தது
முகமதியன் என்றது

எல்லாச் சடங்குகளிலும்
என் சட்டை தான் மாறியது
என்
சாதியோ
இன்னும் பறையனாகவே
இருக்கிறது

- ராஜ. முருகுபாண்டியன்

DALIT

This
Brahmin incantation
Smeared holy ash
Gave the Gita
Called me a Hindu

This baptism
Left sign of cross
Gave the Bible
Called me a Christian

The Kalima
Circumcised me
Placed a cap on my head
Gave the Koran
Called me a Mohammaden

In all the ceremonies
Only my shirt changed
My caste
Remains unchanged
A Pariah.

- Raja Murugupandian

காணாது போன சிறுவர்கள்

ஆலமரமிருக்கும்
கீழோர ஊஞ்சல்
ஆடிக்களிக்கவென
நீளவிழுதிருக்கும்
சற்று அப்பால்
பொன்னொச்சி பூத்துச்
சிரித்திருக்கும்
கிழக்காய்
மாரி மழை நடுவில்
ஊற்றெடுத்துப் பரந்துபடும்
குளமிருக்கும்.

கட்டைப்பனைமரத்தைக்
கப்பலாக்கிக்
காலத்துடுப்பில் நீர்கடக்கும்
சிறுவர்களை மட்டும்
காணேன்.

பலகாலம் குண்டெறிந்தும்
தலைகுனியாப்
பனைமரத்தின் மீதேறிப்
'பால்' கறக்கும்
முதியவரைக் கேட்டேன்.

THE VANISHED CHILDREN

The mighty banyan tree
Aerial roots
As swings
To sway in glee.

A little farther
Ponnochchi flowers
Bathed in smile.

To the east
Drenched in monsoon showers
Brimming village tank.

But
No more the youth
Braving the Time's currents
In boats made
Of palmyrah logs.

Stood the palmyrah tree
Survivor of many a bomb shower
Scaling the tree to tap milk –
A withered old man.
Youth?
I queried.

'காசுவயல் கதிர றுக்கக்
கண்டா போயச்
சேர்ந்தார்கள்'
என்றார் கவலையுடன்.

- இளவாலை விஜயேந்திரன்

Sullenly said he:
"To harvest in money-fields
Disappeared to Canada."

- Ilavalai Vijayendran

நேர்முகத் தேர்வுகள்

நீர்க் குமிழிகளில் கூட
நல்ல ஓவியம் தீட்டுவேன்
குருடரையும் அதை
இரசிக்கச் செய்வேன்.
ஆனாலும் என்ன பயன்?
நான் ஒரு தாழ்த்தப்பட்டவன்
அதனால் காகிதத்தில்
ஒரு கோடு போடத் தெரியாதவனால்
என்னைத் தோற்கடித்து விட்டார்கள்.

கல்லோட்டில் சவ் மேளம் கட்டி
கணக்கற்ற முறையில் அடிப்பேன்.
செவிடரையும் அதற்கு
ஆடச் செய்வேன்.
ஆனாலும் என்ன பயன்?
நான் ஒரு தாழ்த்தப்பட்டவன்
அதனால் ஒத்துகூட ஊதத்தெரியாதவனால்
என்னை தோற்கடித்து விட்டார்கள்.

மண்ணாங்கட்டிகளில் கூட
சிலை வடிப்பேன்.
தண்ணீரில் கரையாத
வழியும் செய்வேன்.
ஆனாலும் என்ன பயன்?
நான் ஒரு தாழ்த்தப்பட்டவன்
அதனால் சாணி கூட
தட்டத் தெரியாதவனால்
என்னைத் தோற்கடித்து விட்டார்கள்.

THESE INTERVIEWS!

I can paint well
Even on water bubbles
Can make even the blind
Drink in its beauty.
But of what use?
I am of a depressed caste
So
They defeated me
With a guy who can't even
Draw a straight line.

I can make a drum
And beat it in ways
Manifold and majestic.
Can even make the deaf
Dance to its rhythm.
But of what use?
I am of a depressed caste
So
They defeated me
With a guy who can't even
Blow the drone instrument.

I can fashion statues
Out of mere lumps of clay.
Can make it defy water.

நிலாவைக்கூட சின்ன உண்டி வில்லால்
ஒரே அடியில் சிதறடிப்பேன்.
ஆனாலும் என்ன பயன்?
நான் ஒரு தாழ்த்தப்பட்டவன்
அதனால் மாங்காகூட
அடிக்கத் தெரியாதவனால்
என்னைத் தோற்கடித்து விட்டார்கள்.

அம்மா!
இன்னும் எவ்வளவு காலம்
இந்த நொகத்தடியைச் சுமப்பது

– தலையாரி

But of what use?
I am of a depressed caste
So
They defeated me
With a guy who can't even
Pat a dung-cake.
I can shatter the moon
With a small sling and a pebble
In one fell blow.
But of what use?
I am of a depressed caste.
So
They defeated me
With a guy who can't even
Fell a mere mango.

Oh! Amma!
How long more
Do I have to carry this yoke?

- Thalaiyaari

பன்றிகளைப் பற்றி என்ன தெரியும் உங்களுக்கு?

மேலும் சில விபரங்கள் இதோ
உயிரியல் சம்பந்தமானவை

ஒன்று:
பன்றிகள் சேற்றில் திளைக்கவில்லை
ஏனெனில்
அது சேறென்று
அவை அறியாது.

இரண்டு:
பன்றிகள் அழகானவை
ஏனெனில்
அவை ஒப்பனை செய்து கொள்வதில்லை.

மூன்று:
பன்றிகள் ஈன மிருகங்களல்ல
ஏனெனில்
தம்மை விட தாழ்ந்ததாய்
எதைப் பற்றியும் அவை கருதுவதில்லை.

கடைசியாக:
பன்றிகள் மனிதனின் அடிமைகளல்ல
ஏனெனில்
மனிதனால் அவற்றிற்கு லாபமில்லை

- ஜெயமோகன்

WHAT DO YOU KNOW ABOUT PIGS?

Here is some more information
Related to biology.

One:
Pigs do not luxuriate in slush.
Because
They know not
It is slush.

Two:
Pigs are beautiful.
Because
They don't apply make-up.

Three:
Pigs are not mean creatures
Because
They don't consider anything
Inferior to them.

Finally,
Pigs are not man's slaves.
Because
They profit not from man.

- Iayamohan

*

வானத்தைக் கிழித்துப் போடுங்கள்
மழையைத் தடுத்து நிறுத்துங்கள்
இருட்டை இல்லாமல் செய்யுங்கள்
காட்டைப் பொசுக்குங்கள்
மண்ணைத் தூவுங்கள்
வெளியை விரட்டுங்கள்
குன்று மலை எல்லாவற்றையும்
தகர்த்து விடுங்கள்
காற்றைக் கண்டு கொள்ளாதீர்கள்
நிலாவை ஒதுக்கி வையுங்கள்.
எதுவும் வேண்டாம்
நான் இலைப் பனியாய் பிறக்கும் வரை.

- எஸ்.எல். நரசிம்மன்

*

Tear as under the sky
Stop the rains
Banish the darkness
Burn down the forests
Scatter the sands
Drive away the space
Pulverise the hills and mountains
Ignore the wind
Discard the moon
Stifle the waterfalls
I need nothing

Till I am born
As a dewdrop on a leaf.

- S.L. Narasimhan

உதிர் கனவு

நிசிதோறும் நிசிதோறும்
என் பறவை தன்
இறக்கையின் நூறு அலைவுகளுக் கொரு
தடவை தன் கனவை யுதிர்த்தது
நூறு கனவுகளுக் கொன்றென்று
ஒரு சிறகை உதிர்த்துப் போனது
நூறு சிறகுகளைச் சேர்த்து என்
ஒரு கனவை மீட்கிறேன் நான்
நூறு கனவுகள் என்னிடமிருக்கின்றன
நிசியால் உலகையளக்கிறோம்
நானும் என் பறவையும்
ஒளியாய் கடலாய் இசையாய்
உதிரும் சிறகுகளை
மொழியாய் புனைவாய் காதலாய்
பொறுக்கிக் கோர்த்தபடி
பின் செல்கிறேன் வெகுதூரம்
எல்லாருடைய தூக்கத்தின் மேலாகவும்
எங்கள் கனவுகள் மிதந்து போகும்
உண்மையில் தூக்கம் பற்றின
கனவொன்றை நிசியும்
எப்போதும் உதிர்த்துக் கொண்டிருக்கிறது

- பா. வெங்கடேசன்

A SPRAY OF DREAMS

Night after dark night
For every hundred fluttering wings
My bird
Dropped a dream.
For every hundred dreams
A feather.
Garnering a hundred feathers
I strum my dream.

We measure the world by nights -
My bird and I.

Feathers drop
As light, as ocean, as music.
I collect and string them
Into language, into art, into love
And retreat distance long.

Our dreams float and rise
Above everyone's slumber.
And
The night keeps spraying
A dream about sleep.

- P. Venkatesan

விடுதலை

அட்ச தீர்க்க ரேகைகள்
பொய்ச்சட்டை
கழற்ற
புவி யுருண்டை
நிர்வாணமாய்

ஓரம் நின்ற
கோள்களை
ஊசியால் குத்தி
நூலிலிட்டு
கீழ் தள்ளி
ஒரு முடிச்சிட்டேன்

அட்டத்தில எறிந்து
சோம்பல்
முறித்தேன்

யார் முதுகிலும்
தூக்கி
வைக்கத்
தேவையில்லை
பூமியை இனி

நான்
நானாயிருக்கலாம்

- மனோன்மணி

LIBERATION

Latitudes and longitudes
Shed their notional shirts
The globe
Stood naked

Collected the planets
Hanging around
Threaded them together
Tied into a bundle

Threw it in the attic
And flexed my muscles

No more need
To load the world
On anyone's back
I
Can be Myself.

- Manonmani

*

பால்யத்தில் சேர்ந்தான்
பரந்தாமன்

கூப்பிட்டும் உடன் வராக் காரணத்தால்
வீசப்பட்டது ஸ்பானர்

மூணு தையல் நெற்றியில்

இப்போ
தழும்பு மாறா பரந்தாமன்
ஓனர்

தாமசுக்கு
தாடையில் தையல்

- ரவி சுப்ரமணியன்

*

Parandaman
Joined as a young boy

Didn't respond immediately
Spanner became a missile
Three stitches on forehead

Now
Parandaman still carries the scar
But he is the owner

Thomas
With stiches in his chin.

- Ravi Subramanian

எண்கள்

எண்கள் துரத்தின
லெட்ஜர் புக்கை அகல விரித்து
நடுவில் கிடத்தி
அறைந்தன எண்கள்
வயிற்றிலிருந்து குமட்டிக் கொண்டு
எண்கள் தெறித்தன.
வலை போல் மஞ்சள் சிகப்பு பச்சை
வவூச்சர் காகிதங்கள் சூழ்ந்தன
முகத்தின் நரம்புகளில், நெற்றியோரத்தில்,
கண் அடியில், எண்கள் கீறிகுருதி வடிந்தது.
பழுப்புக் காகிதங்களில் எனது
சவப்பெட்டி செய்யப்பட்டிருந்தது
எண்கள் நிரம்பியது, ஒன்றிரண்டு
உச்சரித்துத் தேய்ந்த ஆங்கில வார்த்தைகளும்

கலைஞன் செத்துக்கிடந்தான்
கணக்கு டேலி ஆனதாக
எண்கள் கும்மாளமிட்டன.

- ஜோசப் - டி- சாமி

NUMBERS

Numbers chased relentlessly.
From the open ledger books
Slammed the numbers.
From the retching stomach
Gushed out numbers.
Voucher papers
Yellow red and green
Closed in.
Numbers left gory blood marks
On the face, near the eyebrows, under the eyes.
My coffin was made
Of mouldy paper -
Filled with numbers
And a couple of cliched English words.

The artist lay dead
But the accounts tallied
And the numbers danced in joy.

- Joseph D. Samy

வலியுடன் நிகழ்ந்தன யாவும் ...

செதில் செதிலாய் நடந்த உடைப்பு
சுக்குநூறாக சிதறியது வாழ்க்கை
காக்கைச் சிறகுகளில் செதுக்கப்பட்ட
கவிதைக் கனவுகள்
குரூரமாகப் பிடுங்கியெறியப்பட்டன.

மறுக்கவும் முடியாத
வலிய மௌனத்தில்
வலியுடன் நிகழ்ந்தன யாவும்
நசுங்கிப் போன ஆத்மாக்களுக்கு
நினைவுத் தூண் யார் எழுப்புவது?

யாவும் மறக்கப்படும்
ஒரு யுகப் புழுக்கத்தில்
யார் வேர்வைக்கு யார் விசிறுவது?

தீய்ந்து கருகிய
கனவுக் குவியல்களின் தீசல்களிலிருந்து
ஏதேனும் ஒரு கங்கு
அணையாதிருக்கத்
தேடித் துழாவும் கண்ணீரை
யார் அர்த்தப்படுத்துவது?

சும்மா போய்க் கொண்டிருப்பவனையும்
அருகழைத்து
அறைவிட்டனுப்பும் வாழ்க்கை
மீண்டும் மீண்டும்
துரோகங்களின் சாட்டையில்

PAIN MARKING EVERY TURN . . .

Come apart scale by scale
Life smashed to smithereens
The poetic dreams
Sculpted in crow feathers
Cruelly plucked and scattered

In the heavy obstinate silences
It all happened in pain
Who to raise memorial pillars
For the devastated souls?

In the epochal swelter
Banishing memory's trails
Who can fan away whose sweat?

From the burnt residues
Of incinerated dreams
A tear in a valiant search
To save a cinder
From enveloping death-
Who to lend it a meaning?

The life that beckons
A random unsuspecting pedestrian
Just to administer a slap
The top that gyrates

சுழலுகிற இந்த பம்பரத்தின்
ஆட்டம் தள்ளாட்டமே
ஆயினும்
அதுவே அதன் நடனம்!

- செந்தூரம் ஜெகதீஷ்

At the whip of betrayals galore-
Its movement faltering
That is its dance!

- Senthooram Jagadesh

அறியாது உதிரும்

மரத்தடிப் பாறையில் அரங்கன் போலப் படுத்திருக்கிறேன்

அறியாது

உதிரும் வேப்பம் பூக்கள்
பாடும் ஜோடி மைனா
எதிர்ப் பாட்டு இசைக்கும் கவுதாரி
துணை யழைக்கும் குயில்
இரை பொறுக்கித் திரும்பி வந்தமரும் சிட்டுக்குருவி
மரங்கொத்தி அலகு கொத்தும் புழு.

கவிதை அறியாது
கற்பாறை

- சிபிச் செல்வன்

UNREGISTERED

Like Lord Ranganatha
Me reclining on a rock
In cool tree shade

Blissfully moony

A shower of neem flowers
A pair of mynahs
Filling the air with melody
A grey patridge singing
In resonant strains
A koel beseeching her mate
A sparrow returning to nest
With its feed
A woodpecker's beak
Busy tackling a worm.

Knows not the poetry around -
This rock.

- Sibi Selvan

அடங்கியவன்

நல்ல உலகம் என்றால்
ஏதோ விண்வெளியில் நின் று
பல உலகங்களைப் பார்த்தவன் மாதிரி
உணவுப் பொருட்களை மண்ணில் இறைத்து
பெருக்கி தின் று தீர்த்து நகரும் வேடிக்கையான
அசைவுகளைக் கொண்டது இந்த உருண்டை என்றான்
நீ எங்கிருந்து பேசுகிறாய் என்றேன்
ஏதோ ஒரு முனையில் பூமி மீது
துளைத்து மறுபுறம்
வெளிப்பட்டவன் நான் என புழுதி உதறினான்
உடம்பில் கொஞ்சம் எண்ணெய் வாடையும்
தலை உரோமங்கள் கரிந்தும் இழிந்த
புண்களோடும் இருந்தான்
பிறகு என்ன உத்தேசம் என்றேன்
வரும் வழியில் பெரும் பாறைகள் ஒன்றோடொன் று
பேசிக் கொண்ட மொழியைக் கேட்டதாகச் சொன்னான்
பழைய தங்க நாணயம் ஒன்றைக் கையில் கொடுத்தான்
வெளிப்படும் முன் மேலடுக்கில் புதிய பிணம் ஒன்றை
புணர்ந்ததாகவும் கூறினான்
தனது இழிந்த புண்ணில் குதிரையின் அழுகிய சீரம்
தெளிக்கச் சொல்லி எச்சில் உமிழ்ந்தான்
உமிழ்ந்த இடத்தில் புற்கள் கனிந்து புகையெழும்பியது
நான் விதிர்த்து நீ என்ன மாற்றுகிரக வாசியா
என்றலறினேன்
அவன் சிரித்தவாறே
கைகளை உயரே தூக்கி நீரில குதிப்பது

THE MYSTERY MAN

Isn't this a good world?
He proclaimed as if
He had scanned the myriad worlds
From a lofty perch in space
        - 'This but a funny sphere
        With bizarre movements
        Scattering food on the ground
        Gathering it again
        Eating and moving'

Where are you from?
'I punctured a hole in some corner
And emerged at the other end
Of this globe'
He dusted his body
Smelt of crude oil
Hair singed
Body furrowed by wounds

What plans?
'I heard on my way
Mountainous rocks
Speaking to one another'
Gave me an ancient gold coin
'Before I emerged here
Near the earth's crust
I copulated with a fresh corpse'

போல நிலத்தில் பாய்ந்தான்
சரேலென அவன் உடல் மறைய
மணல் அலை, அலையாய் எழும்பி அடங்கியது.

- யவனிகா ஸ்ரீராம்

'Sprinkle on my wound
Serum
From rancid horse meat.'
He spat out a lump of spit
The grass on contact
Emitted a column of smoke

Dumbfounded I was
Man from another planet?
I yelled

Breaking into a smile
He raised his arms
And plunged into the ground
His body disappeared
Sand rose in waves
And slowly settled down.

- Yavanika Sriram

ஒரு முற்றுப்பெறாத கவிதையைப் போல ...

ஒரு முற்றுப் பெறாத
கவிதையைப் போல......
என் மூத்த சகோதரி

வசிக்கிற தெருவில்
யார் வீட்டு வாசலுக்காவது
வாழை மரங்கள் வருகையில்....
அடுப்படியிலிருந்தோ....
படுக்கையறையிலிருந்தோ வரும்
அந்த விசும்பல் சத்தத்தை
நான் கேட்பேன்.

அவளுக்கு பிரியமான இடம்
என் வீட்டு ஜன்னல்
அவள் முகம் புதைத்து அழுதழுது
அதுவும் தேய்ந்து கொண்டேயிருக்கிறது
அவள் இளமையைப் போல.....

அவளுக்காக .....
அவள் நீருற்றி வளர்த்த
மல்லிகை செடிகள்
பிரசவிக்கிற வெள்ளைக் குழந்தைகளை
மரவட்டப் பூச்சியின்
கால்களைப் போல அடுக்குகிறாள்.
பின்பு ஒரு வெப்பப் பெருமூச்சோடு
அவைகளை
சாமிப் படங்களுக்கு சாத்துகிறாள்

LIKE A POEM UNCOMPLETED...

Like a poem
Uncompleted...
My Akka...

In our street,
While the auspicious
Plantain trees
Are moved to some house...
From the kitchen...
Or from the bedroom
Sound of her sobs.

Her favourite spot
A particular window
Would bury her face
And weep in silence
The window
Gradually wearing out
Like her youth...

She watered and tended
The jasmine plants
They bear
Milky white children
She strings them
Like centepede legs
And

எதிர்வீட்டு
நர்சரி நாற்றுகளின்
கான்வெண்ட் பாஷைகளை
கவனிக்கும் போதெல்லாம்
அவள் பார்வை
அப்பாவின் பக்கம் திரும்பும்.

பாவம் அவர்....
அவரை, அவரைப் போலவே
வயசான ஈ-சிசேர் மட்டுமே
தாங்கிக் கொண்டிருக்கிறது.

என்றுமே
கவிதைகளைப் பற்றி
பேச விரும்பாத அப்பா
அன்று முதன்முதலாய் சொன்னார்.

"அவள் சோகங்களை
பேப்பரிலும், பேனாவிலும்
பதிவு செய்கிறீர்களே!
யாராவது ஒருவர்
இதயத்திலாவது அவளை
பதிவு செய்யுங்களேன்....."

ஒரு முற்றுப் பெறாத
கவிதையைப் போல
என் மூத்த சகோதரி......

- பவா செல்லதுரை

With a hot sigh
Decorates
The pictures of gods.

Lisps float towards her
From the nursery school
Next door
Her eyes
Instinctively
Turn to Appa's side

Poor Appa...
Only the easychair
As old as he
Has time for him.

Never talked
About poetry - Appa
That day
For the first time
He broke his silence
"You inscribe
Her sorrows
With paper and pen!
Why not
Inscribe her
In someone's heart..."

Like a poem
Uncompleted
My Akka...

- Bava Chelladurai

மௌனம்

இரைச்சலும் சந்தடியும்
நிறைந்த இந்த உலகில்
உங்களுக்காக நான்
சேமித்து வைத்திருக்கும்
செல்வம் .....
மௌனம்

முனிவர்கள் கூறுகிறார்கள்
மௌனமே அழகு
மௌனமே லட்சியம்
மௌனமே கடவுள்

எல்லோருக்கும்
பகிர்ந்தளிக்க முடிந்த
அப்பெரும் செல்வத்தை
எனக்குள் நான்
அனுபவிக்க முடியவில்லை

ஓயாத பேச்சு
சலியாத முணகல் என
உள்ளுக்குள்
பெரும் சப்தக் கிடங்கை
..... ஒலிக் குப்பைகளைச் .....
சுமந்து கொண்டு
அலைகிறேன்

சமயங்களில்
அதை வெளியே
கொட்ட நேரும்

THE DUMB

In this world
Full of din and bustle
The one wealth
I've treasured for you -
Silence.

Saints proclaim
Silence is beauty
Silence is ideal
Silence is god.

This great wealth
Others have known to share
I can't savour
Within myself.

I wander around
Carrying a load -
Within myself
A huge godown of noise
Ceaseless chatter
Endless whining
A garbage bin of sound.

At times
I pour it out
Only to be smeared

அவமானக் கறைகளையும்
பூசிக் கொள்கிறேன்.

ஊமைகள்
மொழிகளால் விடுதலை
அளிக்கப்பட்டவர்கள்
என
சமாதான வார்த்தைகளை
கூறிக் கொண்டாலும்
என்னால்
சகித்துக்கொள்ள முடியவில்லை
வாயால் பேசாமல்
எல்லோரும் என்னிடம்
சைகைகளால் பேசுவதை

- பிருந்தா சாரதி

With dabs of shame.
The dumb
Are liberated
From the fetters of language –
But
I can bear not
Messages
Coming not in words
But in sign language.

- Brinda Sarathy

கோமுகி நதிக்கரைக் கூழாங்கல்

இவை
நடுவிண்ணின் அந்தர மிதப்பில்
சிதறி வீழ்ந்த எரிகற்கள்
பெருகும் நீர்ச்சுழற்சி அணைப்பில்
குளிர்ந்து கிடக்கின்றன
படர்ந்தேறிய தகிப்பின் விஷம் நழுவும்
மணற்கரைக் காட்சி
நெஞ்சோலம் தணிக்கும் நீர்த்தாளம்
செங்குழம்பு மண்படிவின் குளிர்வருடல்
விரல் நீண்டு மறைக்காத பனிவெளி
பேச்சின் வீச்சமற்ற ஏகாந்த ராஜ்யம்
மீண்டும் மீண்டும் தழுவிச் செல்கின்றன
புதுப்புது நீர்த்தாரைகள் குளிரூட்டி
சொல்லமுங்கிய நாவுகளின் துடிப்பு
ஏந்திய கைகளின் கதறல்
தயங்கிய கால்களின் பயப்பதட்டம்
அன்பின் அவஸ்தை
காதலின் குரூரம்

PEBBLE ON THE BANKS OF GOMUKI RIVER

These -
Asteroid fragments
Hurled down from
Ethereal realms of space
In the embrace of surging vortexes
Enjoy cool repose
Sandy expanse
Rid of the sting
Of enveloping heat
Lapping ripples calming
The roar of the mind
Cool stroking
Of turbid red-soil sediments
Misty stretch
Undimmed by outstretched fingers
Kingdom of blissful solitude
Unsullied by chatter
Cuddled by
Newer and newer jets
Throb of tongues
With voices stilled
The cry of extended hands
The tremor of halting legs
The torment of affection
The cruelty of love
The swelter of strangling life-

சுருக்கிடும் வாழ்வின் வெம்மை
ஏதுமில்லா உன்மடிக்கு
கோமுகி நதியே
இதோ இன்னுமொரு கல்

- இளமுருகு

Unto your lap
Free from these encroachments,
Oh! Gomuki river!
Here is one more stone.

- Ilamurugu

பின்னும் ஒரு தடவை

சிகரெட்டின் துர்நாற்றம் மீறியும்
இதழில் பதியும் இதழ்கள்.
இடையே துவர்ப்பாய் எச்சில்
அடிவயிற்றில் அமிலம் சுரக்க
தொண்டையில் கமறும் வாந்தி.

தேகமெங்கும் விரல்கள் ஊற
உயிரில் பரவும் ஒரு பெரும் தீ.
காட்சிகள் கரையும்
கண்களின் சொருகலில்
அறைக்குள்
கருகிய ரத்தநிறத்தில்
தெப்பமாய் பாறைகள் சரிய
சரிய சரிய சரிய சரிய்ய சரிய்ய
சரிய சரிய்ய சரிய திடீரென
உடைந்து பெருகும் பனிவெள்ளம்.

பின்
ஒரு நிறமற்ற பெருவெளி
அசையும் சிறு மேகம்
கசியும் இருள்
குறுக்காய் விரையுமொரு பறவை
முகிழ்க்கும் மல்லிகை வாசம் என
மெல்ல மெல்ல
பிரக்ஞை அவிழ
தூக்கத்தில் கரைவோம்
நாம்

– முத்து மகரந்தன்

AND AGAIN . . .

Overcoming the cigarette stink
Lips planted on lips.
Saliva with astringent taste
Acid churning the abdomen
Nausea grating the throat.

Fingers creeping all over the body
Consuming fire spreading
Pictures dissolving
With eyelids drooping.
In the room -
In black blood's hues
Rocks sliding like floats
Sliding, sliding, sli....iding
And suddenly
Icy flood breaking the banks.

Then
A colourless expanse
A small cloud moving
Darkness oozing
A bird flitting across
Enveloping jasmine fragrance -
And
Slowly, gently
Consciousness ebbing away
We
Dissolve in sleep.

- Muthu Magaranthan

*

சொல் மனம் விரிந்த வதனம்
அல்லது வதனத்தின் நகை
அல்லது நகைக்குப் படிமான வெண்முத்து
அல்லது வெண்பாலற்ற சரம்
அல்லதுசரசரத்துத் தாக்கிட்ட அம்பு
அல்லது அம்புகள் துறந்த லட்சியம்

அர்த்தம் சொல்லின் குறுதித்தீட்டு
அல்லது பொருளாகும் உயிர்ச்சாகரம்
அல்லது சாகரம் உண்ட புள்
அல்லது புட்கள் மலிந்திட்ட ஒரு ஸ்வர்க்கம்
அல்லது ஸ்வர்க்கம் போலொத்த நினைப்பு
அல்லது நினைப்புகள் நெளியும் பிண்டத்தின் நீலம்.

- பெருந்தேவி

*

A face adored by the mind's word
Or the smile dancing on the face
Or the pearl embedded in the smile
Or the string shedding white milk
Or the arrow surging forward
Or the target renounced by the arrow

The meaning the menstrual deposit of the word
Or the ocean of life condensed into the meaning
Or the bird drunk with the ocean's essence
Or the heaven teeming with the birds
Or the memory tinged with the heaven
Or the lumpy blue swarming with the memories.

- Perundevi

நிராயுதபாணி

அம்மா சத்தியம்
வாங்கிக் கொண்டாள்
நான் கோபிக்கவே
கூடாது என்று.

அப்பாதான் கெஞ்சினார்
தர்க்கம் செய்யாதே என்று.

அண்ணன்மார்களின்
அறிவுரை
பிடிவாதத்தை
மூட்டை கட்டு.

பிறவிக் குணங்களை
குழிதோண்டி புதைத்துப்
புகுந்த வீட்டிற்கு
விசாவும் வாங்கியாயிற்று.

இனிமேல்
நிழல்கள் கூட
என்னை காயப்படுத்தலாம்
நான் ஒரு நிராயுதபாணி.

என் மகிழ்ச்சியை
யாரும் திருடவில்லை
நான்தான் தொலைத்து விட்டேன்
கண்டுபிடித்தால்
நிச்சயம்
பகிர்ந்து கொள்வோம்.

– பிரேமபிரபா

DISARMED

Mother extracted
A promise
Never should I
Lose my temper.

Father implored
Please don't be argumentative.

Counsel of brothers
Renounce your obstinacy.

Burying deep
My inborn instincts
I got entry visa
To husband's household.

Hereafter
Even shadows
Can scar me
I am defenseless.

No one
Stole my joys
I lost them.
Should I dare find them
Sure
We will share.

- Premaprabha

கடைசியாய் ஒரு கைகுலுக்கல்

ஜெயித்த மதர்ப்புடன் எதிரில்
என் நெற்றிப் பொட்டை குறிபார்த்த துப்பாக்கியுடன்
சுடத் தயாராய் நீ!

தோற்றுப் போய் தலைகுனிந்தவன் நான்.
என் கைகள் பின்னால் கட்டப்பட்டிருக்கின்றன.
நைலான் கயிற்றின் முடிச்சு
மணிக்கட்டுச் சதையை தின்கிறது.

புகைப்பிரதேசமெங்கும் வெடிமருந்தின் நெடி
தோட்டாக்கள் துளைத்த உடல்கள்
குவிந்து கிடக்கின்றன.
வெடித்துப் பிளந்த அடையாள மற்றவைகள்
இன்னும் அழுகிப் போய்விடவில்லை.
கழுகுகளின் இரைச்சலில்
சற்றுமுன் ஓய்ந்திருக்கும் போரின் சந்தம்.

என்னோடு பிடிபட்டவர்களில் பலர்
சுடப்பட்டுவிட்டார்கள்.
தடித்த காலணிகளையும் மீறி
அவர்களின் இரத்த வெப்பம் சுடுகிறது என்னை!

இதோ உனக்கு வாய்த்திருக்கிறது சந்தர்ப்பம்.
மூளையை சிதறடிக்கிற
உன் துப்பாக்கித் திறனை சோதித்துக் கொள்....

உறுதியாகி விட்ட மரணம் வலியற்றது.
என் மரணமே நான் விடுக்கும் கடைசி செய்தி.
என்றாலும் நண்பனே!

FOR A FINAL HANDSHAKE

You -
With the arrogance of victory
With a gun pointing to my temple
Ready to pull the trigger!

Me -
Head bowed in defeat.
Hands tied behind.
The nylon rope's knot
Biting my wrists.

Smoke - filled expanse
Reeking of explosives' stench
Bullet-riddled bodies
In indifferent piles.
The ones blasted out of recognition
Not decayed yet.
War's fury just stilled.
The shrieking, hungry vultures,

Many captured with me
Shot dead.
The warmth of their blood
Scorches me
Even beyond the monstrous boots.
Here's your chance
To blast my brains
Test the power of your gun
Certain death carries no pain.

என் கைகளை அவிழ்த்துவிடு
கடைசியாய் ஒருமுறை
உன்னுடன் கைகுலுக்கிக் கொள்கிறேன்

- சூத்ரதாரி

My death is my final message.
Still, my friend!
Release my hands......
For the last time
Let me have a handshake
With you.

- Sutradhari

எழுதப்போகும் கடிதம் பற்றி ...

அர்த்தமற்ற பொழுதுகளில்
கோர்த்துக் கொண்டிருந்த வார்த்தைகளால்
உனக்குத் கடிதமொன் று எழுதுவேன் - அது
கடந்த நிகழ்வுகளின் ஆறாத் தழும்புகளை
விளக்குவதாயிருக்கும் அல்லது
பரவிக் கிளைத்த பெருமரம் தாங்கிய
வேரும் விழுதுகளும் மக்கி மரமும் மடிந்ததன்
காரணம் கேட்டுவரும்.
குழம்பிய கதைகளைத் தெளிவுருவாக்கும்
தெளிந்த பிம்பங் காட்டுவதை
அடியோடு கலக்கித் தேடும்
எரிகின்றதில் நீராய் வீழ்ந்து
கருகியது போக மீதம் காக்கும் அல்லது
எண்ணெய் வார்த்து வானெழும்பும்
தீப்புகையின் ஊடே அலையும்.
பதப்பிரயோகங்களின் பண்பாடு பற்றி
நிச்சயிக்க முடியாது
சொற்றொடர்கள் முடிவடையாதிருந்தால் அது
எழுதும்போது ஏற்பட்ட பெருமூச்சால் கரைந்திருக்கலாம்
தகவல்களில் தவறிருக்கலாம் - திருத்தங்கள்
தீர்ந்து போனதால்
அஸ்வதிவாரத்தை பெயர்த்துப் பார்த்தது யாரென் றும்
சுவர்களைத் தாங்கியதில் காயம்பட்டவர் யாரென் றும்
காண முயலமாட்டேன்
கோபுரப்புறாக்களின் விலாப்புறக் கதகதப்பு

A LETTER YET TO BE BORN . . .

A letter to you
Is taking shape
Threading the words
Floating in languid moments.
It would
Explain the deep scars
Of events long past
Or
Seek reasons for
The mighty spreading tree
Its roots and aerial roots
Reduced to decay and death.

And it would
Lend clarity to turbid stories
Churn to depths and search
Beyond illusions of clarity
Dive as water into burning cauldron
And preserve the unburnt fragments
Or
Float amongst the smoke
From the shooting flickers of fire

Can't vouchsafe
Twenty-four carat words
Mangled may the words be
By heavy sighs whilst writing

இருட்டுமரப் பொந்தாந்தையின்
பார்வைக் கனலாய்ப் பெயர்ந்ததை எழுதவேன்
உயிரொட்டி வளர்த்த பூவின்
திசையொட்டி வீசும் மணத்தை மட்டும்
அழித்துப்போன பெயர்தெரியா அரக்கனின்
சுவடுகளைச் சுட்டுவேன் - சிகரங்கள் சிதைந்து சிறு
குன்றுகளாய்க் குறுகிய கொடுமையைக் கூறுவேன்.
கடல் கிடந்த இடத்தில் இன்று
தோண்டத் தோண்டத் துளியும் தோன்றாத
துயரத்தை அறிவிப்பேன்
சூறையாகித் தோட்டம் தகர்த்த
தென்றலை வியந்து
முயலின் முதுகில் வண்ண வரி விழுந்து
நீளவால் முளைத்து அது வலிவான உடல் முறுக்கி
வேட்டைக்குப் பாய்ந்த மாயத்தைக் குறிப்பிடுவேன்.
ஆணையிடுவேன் அடங்கிப் புதைந்திருப்பேன்
குதிரை மீதேறி வாள் சுழற்றுவேன்
நதி வேகமெதிர்த்து நீந்திக் காட்டுவேன்
அழுக்குக் குட்டையினுள் மூழ்கித் திணறுவேன்
கொக்கரிப்பேன் கூத்தாடுவேன். உறுதியிழந்து

Mixed up may be the facts
With clarity evaporating.
But the truth I won't seek
About who burrowed under the foundation
Who got hurt holding up the walls
But I sure will write -
How the gentle warmth
Of the temple-pigeons' ribs
Turned into cruel fire
As the owl stared.
Will trace the footprints
Of the nameless demon
Who wiped out
The spilling fragrance
Of the flower nursed with life.
Will speak of the tragedy
Of the mighty peaks crushed to
Midget mounds.
Will proclaim the grief
Of the expansive ocean
Scorched into barren nothingness.
Will amaze at the gentle breeze
Turning into a tempest
And destroying a lovely garden.
Will point to a delicate rabbit
Donning fierce lines on its back
Growing a whip of a tail

உதவிகேட்டு ஒழிந்திருப்பேன்.
எழுதத் தொடங்கும்போது எல்லாமும் மறந்தாலும்
என் நெஞ்சில் ஒற்றியெடுத்த
உன் பெயரெழுதி வைப்பேன்
விஷயங்கள் அனைத்தின்
ஒரு சொல சுருக்கமாக.

- பூமா. வாசுகி

Twisting its awesome body
And pouncing on its prey.
Will hurl orders
Will sink in submission
Will mount a horse, swing the sword
Will swim against the raging current
Will submerge in a putrid pond
And choke
Will cackle and crow and dance
With energy drained
Will meekly implore for help.
Memory may fail me totally
As I put pen to paper.
But
Will trace your name
From the abyss of my mind
And inscribe it -
As a one-word essence
Of everything.

- Yuma. Vasuki

பூப்பெய்தல்

ஒரு பெண்
பெண் ஆவதை
இயற்கை குலவையிட்டுச் சொல்கிறது.
பருவச் சாளரங்கள் திறக்கப்பட்ட
அவள் மனசில் கனவுச் சிட்டுகளின் களியாட்டம்.
தேவதை வண்ணமும்
தெய்வீக வாசமும் அவள் சருமத்தில்.
பட்டாம்பூச்சியும் தட்டானும் பிடித்து
விளையாடிய அவள் மனசில்
பறக்கின்றன பட்டாம்பூச்சிகள்.
மனசுக்கு மாறுகிறது கால்கொலுசு.
கண்களில் ஜொலிக்கிறது
கன்யாகுமரி தேவியின் மூக்குத்தி.
கன்னிமைக் கதவுகள் திறந்தவள்
பொன்னிமை திறக்கும் போதெல்லாம்
புதிது புதிதாய் தெரிகிறது பிரபஞ்சம்.
ஒரு கனவிலிருந்து எழுப்பப்பட்டு
இன்னொரு கனவுக்குள் நுழைகிறாள்.
தன் ரகசியங்களின் மர்மத்தில்
லயித்துக் கிடக்கிறாள்.
தனக்குள் ஒரு வனம் வளர்த்து
அங்கே துள்ளி விளையாடும்
புள்ளிமான்களோடு கொஞ்சிக்
கிடக்கிறாள் அவளே ஒரு
மானாகி.
தன்னை மீட்டி
தனக்குள் பொங்கும்

PUBERTY

Nature greets
A girl's puberty
With a curious glee.
In her mind
With youth's windows gently parting
Dream birds in joyous whirl.
Her skin aglow
With angelic hues
And divine aroma.
The kid who pranced behind
Butterflies and dragonflies -
Her mind aflutter now
With butterflies.
The jingle of anklets
Drifting to her heart.
Eyes dazzle
With Kanyakumari's nose ring.

Crossing a delicate threshold
Opens her golden eyelids
Universe fans out
In newer and newer vistas.
Emerges from one dream
And glides into another.
In the mystery of her secrets
She luxuriates.
A forest sprouts within her

நாதப் புனலில்
லயித்துக் கிடக்கிறாள்.
அவள் அங்கங்கள் திரண்டு திரண்டு
அவளே அவளுக்கொரு அதிசயமாகும்
இயற்கையின் புதிர் விளையாட்டுக்
குறுகுறுப்பில் துடித்துப் போகிறாள்
உச்சஸ்தாயியில் மிதக்கும் ஒரு கீர்த்தனை போல.
ஆலாபனையில் ஓர் ராகத்தை
வளர்த்தெடுப்பதைப் போல
நிலவு ஊறிக்கிடக்கும் கிணற்றின் தாரைகளை
தன் தாமரைகளின் வழியே
வழியவிடுகிறாள்.
படுத்துக்கிடக்கிறாள்
தண்ணீரில் விரிக்கப்பட்ட
தாமரை இலைக்கம்பளத்தின்மீது.
சூரியன் அந்த ஜ்வாலாமுகிமீது
பொன்முலாம் பூசுகிறான்.
அவள் இளமையைப் பருக காலம் காத்திருக்கிறது.
தன் முதல் கவிதையை
ஒரு வாசகனுக்குப் படிக்கக் கொடுத்துவிட்டு
காத்திருக்கும்
ஒரு கவிஞனைப்போல
தன்னை எழுதிக்கொண்டே இருக்கிறாள்.
தனக்குள் அவள் வளர்க்கும் புதையலை
யாருக்கோ பரிசளிக்க.

– இளையபாரதி

She frolicks with the deers -
Herself transformed into a deer.
Strums herself
And immerses
In the music welling within.
Her body in bloom
She plays with Nature's riddle
A surprise to herself
Titillated by discoveries
Like a lilting note
In a mystery rhythm.
Like the meandering
Flowering of a raga.
Bathes her lotuses
With the moon-soaked water
From her well.
Lies languidly
On the lotus-leaf carpet
Spread on the pond.
The sun bends
To gild her resplendent frame.
Time waits in the wings
To drink in her youth.

Like a poet
Handing out his maiden poem
And in eager wait
She keeps writing herself.
The treasure she nurtures within
As a gift unto someone.

- Ilayabharathi

பறவை

சுட்டுப்பொசுக்கும் நட்டநடுப்பகலில்
மேகங்கள் துளியுமற்ற
பொட்டல் வானத்தின்கீழாக

வெள்ளைப் பறவையொன்று
பறந்து போகிறது
இறக்கைகளை வேகமாய் அசைத்தபடி

இரையெடுத்து மீள்கின்றதோ
இரையெடுக்கப் போகின்றதோ

வெகு அருகாமையில் இருக்கிறது கடல்.

அமர்ந்து பயணித்த பேருந்து
சட்டென திரும்பி வளைந்ததில்
மறைந்து போனது அப்பறவை.

தென்படவில்லை அதன்பிறகான தேடலில்
ஆகாயத்தின் திசைகளைத் துழாவியபோதும்

ஓடிக்கொண்டிருக்கிறது இன்னும்கூட
அந்த ஒற்றை ஒருபறவை
சிறகுகளை வலிந்து அசைத்தபடி
மனசின் வெளிகளெங்கும்
வெள்ளை வெள்ளையாய்.

- ஆர். புருஷோத்தமன்

THE BIRD

Scorching mid-day sun
Beneath
A totally cloudless
Barren sky

A white bird
Was flying
Vigorously flapping its wings

Returning after a repast
Or in search of food

The sea was close by.

The moving bus
A sudden sharp turn
The bird out of view.

I scanned
The sky's vast expanse
The bird was lost

Still
Vigorously flapping its wings
The lone bird keeps flying
As fluffy white strip
Filling my mind's space.

- R. Purushothaman

தாம்பத்தியம்

என்னைத் தழுவிச் செல்லும்
தென்றல் அறியும்
எனது மென்மை

என்னைச் சிதைத்து அழிக்கும்
வாழ்க்கை அறியும்
எனது உறுதி

நான் அணைத்து வளர்க்கும்
குழந்தை அறியும்
எனது நேசம்

என்றாவது வரும்
மழை அறியும்
எனக்குள் இருக்கும் கவிதை

பனிபடர்ந்த
புற்கள் அறியும்
எனது காதல்

எனது கவிதைகள் அறியும்
எனது பூகம்பங்கள் அறியும்
என்னை

எப்போதும்
அறிந்ததில்லை நீ
எனக்கு நேர்ந்த
எதையுமே.

– சல்மா

MATRIMONY

The breeze
That caresses me
Knows
My softness

The life
That mutilates and destroys me
Knows
My tenacity

The child
Whom I cuddle and treasure
Knows
My affection

The rain
Which appears fitfully
Knows
The poem within me

The dew-laden grass
Knows
My love

My poems
My volcanoes
Know
Me

And you -
Never knew
Anything
Which ever happened to
Me.

- Salma

உறக்கம்

எல்லோரும் நிம்மதியாய்
குறட்டை விட்டுத் தூங்குகின்றனர்
கைகால் ஓய்ந்து
உடல் பூராவும் வியர்வை வழிய
சாக்கடை ஓரம்
திண்ணையில்
பிள்ளையார் அருகில்
பஞ்சு மெத்தையில்
இன்னும் ஓலைக்குடிசையில்
இன்னும்
எல்லா ஊரிலும்
மிக நேர்த்தியாக நடைபெறுகிறது
தூக்கம் மட்டும்.
சிலர் மாத்திரையில்
இன்னும் சிலர் சாராயத்தில்
பெண்கள் அடுப்படியின்
வெப்பத்தோடு.
எல்லோரும் உறங்க
நடுநிசியில் நான்
தேடிக் கொண்டிருக்கிறேன்
உறக்கத்தை.

- சுகந்தி சுப்ரமணியன்

THE SLEEP

Everyone sleeps
Peacefully with a healthy snore
Completely fagged out
Drenched in sweat
Near open gutters
On the thinnais
Near Pillaiyar idol
On soft mattresses
In thatched sheds
And
In towns and villages.

Sleep goes on nicely tidily
Some with tablets
Others in a haze of booze
Women carrying
The kitchen swelter.

When all are in deep slumber
In the dead of night
I search in vain
For my sleep.

- Sugandi Subramanian

சிதறிய பிம்பங்கள்

தேவையற்றதாய் கிடந்த போதும்
உருவத்தை நினைவுறுத்தும்
என்றோ
நொறுங்கிச் சிதறிய
கண்ணாடித் துண்டுகள்

நிகழ்ந்து கழிந்த
விநாடியினுள்ளும்
ஒளிந்து கிடக்கின்றன
முடிந்து போகாத நிகழ்வுகள்

விளக்கம் தரத் தயாராகின
ஆயிரம் வார்த்தைகள்
புரியப்படாத படியே
மொழிபெயர்ப்புக்காய்
காத்துக் கிடந்தது மௌனம்

- தேவேந்திர பூபதி

SCATTERED IMAGES

Lying as useless
Reminding me of faded images -
These scattered
Shards of mirror

In moments
Long past
Lie ensconced
Incomplete events galore

A thousand eager words
Ready with explanations
But
Beyond understanding
Waiting for translation –
Silence.

- Devendra Bhupathi

ஆதியிலே சூன்யம் இருந்தது ...

அந்த நிலத்தை என் தந்தை வாங்கினார்
நாங்கள் குடியிருக்கிறோம்

அதைஒரு ஆசிரியர்
தனது பிள்ளைகளின்
படிப்புச் செலவுக்காக விற்றதாக
பத்திரம் கூறுகிறது

அதற்குமுன் அது ஒரு
ஈயம் பித்தளைக்காரனிடம் இருந்தது

ஒரு ஜமீந்தாரின் ஆசை நாயகியிடமிருந்து
அது அவனிடம் சென்றது

அதற்கு முன்பு அது
வெள்ளைக்கார பிரபுவிடம் இருந்தது

அதற்கும் முன்பு
ஒரு பேரரசனின் படைத்தலைவனுக்கு
சொந்தமாயிருந்தது

அதற்கு முன் அது
நாடோடிகளிடம் இருந்தது

அதற்கு முன் அது
ஆதி மனிதர்களிடமிருந்தது

அதற்கும் முன்பு அது
கடவுளுடையதாயிருந்தது

அதற்கும் முன்பு அது
சூன்யமாயிருந்தது.

– எம். எஸ்தர்

IN THE BEGINNING THERE WAS VOID

My father had bought that land
We live there

A teacher had sold that land
To meet sons' educational expenses
So said the sale deed
Before that it belonged to
A tinsmith
He had purchased it
From a zamindar's paramour

Earlier it was with
An English gentry

Farther back
It belonged to
Some emperor's army officer

Still earlier
With nomads

Before that
With original tribes

Before that
It was god's

Even before that
It was a void.

- M. Esther

அந்நியம்

அர்த்தங்களின் சவ நெருக்கடியிலிருந்து
நாம் மீளவில்லை இன்னும்
பாதாள தனிமையில் உறையும் நாட்கள்
பணி தொடர இரவுகளின் கதை
உன் தயங்கின பேச்சில்
தெளியும் மௌனத்தின் புழுக்கம் தாங்காமல்
மின் விசிறிகள் எரியும்
தரை தாண்டின கனல் வெளிகள்
குடும்பங்களின் சுவர்களில் மோதும்
பாசாங்கைப் பற்றின கற்பனை
வலியில் குற்றவுணர்வின் புகை
மண்டும் வளாகம் யாவும்
வெறுமையின் தாளம் தப்பின பாடல்
நிதானங்களின் போதையூட்டும் ராகம்
உணர்வுகளை நுட்பிக்கும் சருகிசை
எல்லாம்
நிறம் மாறும் ஓவிய உடல்
நரம்பெழ உண்மையின் உயிரை
எந்த வழியாய்ப் பருக வென
வாழ்வின் உதடுகள் தாகிக்கும் வேளை
நம்மைச் செதுக்கின சிற்பம்
நம்முன் சிலைக்கும்
நாம் நமது உயிர் த்வனிகளை

ALIENNESS

We
Not escaped yet
From the sepulchral crisis
Of meanings
Days buried in the solitude
Of dark depths
Story of night to sustain work
Unable to stand the swelter of silence
Slithering in your reluctant words
The electric fans smoulder
The burning wastes across land
Slam against domestic walls
Imagination anchored in deceipt
Spew out smoke of guilt
Engulfing the campus space
Song of emptiness missing beats
Melody of intoxicating sobriety
Music of dried leaves
Sharpening sentiment
These and everything
Body in painting changing colours
Life's lips thirsting for
The nerve-tingling essence of truth
And knowing not how to drink

விட்டு விட்டு வெறும் வெளியில்
கரைந்து பிரிவோம்
அர்த்தமின்மையை முழுங்கினபடி

- ஹவி

Then
The sculpture that hewed us
The 'we' we sculpt within us
Abandoning our life's
Elemental vibrations
Dissolve and drift
In the void
Proclaiming meaninglessness.

- Havi

அப்போதிருந்த இடைவெளியில் ...

இரைச்சலுடனான சுழற்சியை நிறுத்திய
மின்விசிறி தொங்கும்
அறையின் வியர்வைக் கசகசப்பைத் தூரத்து
மரத்தின் மெல்லிய ஈரக்காற்று
தழுவி மணப்பதைச்
சுவாசிக்க சுகம்.....

இன்னமும் கண்களை விட்டகலாத
தொலைக்காட்சித் தீவுத் தொடர்புகளைத் துண்டித்து
அண்ணாந்து பார்க்க நட்சத்திரங்களும்
அதனடுவே நிலாவும்
விசாலமான பிரபஞ்சம்
காணக் குளிர்ச்சி......

இடைவிடாது ஒலிக்கும் மவுன கவிதையை
ஒரு யோகியின் மனநிலையில்
இருந்து கேட்க
செவிக்கு உணவு......

அமுதின் சுவையை வார்த்தைகளில் நிரப்பிப்
பரிமாறும் ஆர்வத்தில்
மெல்ல முணுமுணுக்கும் என்
பாடலை நிறுத்த
மின்சாரம் வந்தது......

ஆனாலும்
நின்று போனதற்கு
நன்றி சொல்வது அவசியம்தான்......

- சேதுபதி

DURING THE INTERLUDE ...

The whirling fan stopped
Room, a pool of sticky sweat
Gentle cool breeze
Floating from a tree
Caressing the body -
The delight of fresh air...

Snapping the lingering links
With the television island
Looked up
A spray of stars
Moon at the centre
An eyeful...

Ears tuned to
The constant hum
Of poetry's silences
Like a yogi in trance
Feast for the ears...

Back came power
Music stopped...

But
Thank I did
The power that failed
For the lovely interlude..

- Sethupathi

முகமற்றவர் நினைவாக

கைகளை மட்டுமே பார்த்திருக்கிறேன்.
தட்டின் முனையைப் பிடித்தபடி
பவ்யமாய் வைக்கும்.
அடுத்த முறை
அடுத்தொரு பதார்த்தம்.
இடையே குறிப்பறிந்து
சட்னி, சாம்பாரென விளம்பல்.
நாள்பட்ட சீருடையில்
அவசரத்தின் கறைகள்.
துண்டு காகிதம் சாப்பிட்டதின்
விலை சொல்ல,
மறுபடி பவ்யம்.
சில்லறை எலும்புகளை
சிலீரென வீசிவிட்டு
வாசல் நோக்கி
அகங்கார நடை.
உடைகள் மாறியிருக்கின்றன.
வண்ணங்கள் மாறியிருக்கின்றன.
எந்த சிப்பந்தி முகமும்
இலையில் பரிமாறப்படுவதில்லை.

- துளசி

REMEMBERING THE FACELESS

I have
Looked only at the hands -
Holding the plate by its edge
And placing it politely.
Next
Another dish.
Thoughtful enquiries
In between -
Chutney? Sambar?
Old frayed uniform
Marked by stains.
A little piece of paper
Spells out the price of the snacks.
Again a polite bow.

Leaving a small change
As a tip
I stage an exit
In style.

Uniforms have changed.
Colours have changed.
But the face of the bearer
Never served on the plate.

- Thulasi

நட்பு முரண்

நான் தளிர்
நீ நெருப்பு
சாம்பலானது நந்தவனம்

நான் படகு
நீ திசை
தொலைந்து போனது பயணம்

நான் அல்லி
நீ தண்ணீர்
மூச்சுத் திணறியது பொய்கை

நான் வண்ணம்
நீ தூரிகை
ஊனமானது ஓவியம்

நான் சொல்
நீ பொருள்
அர்த்தமற்றுப் போனது காவியம்

நான் மகரந்தம்
நீ காற்று
மலடாய்ப் போனது வசந்தம்

நான் வானம்
நீ நிலவு
அஸ்த்தமித்தது வெளிச்சம்

நான பயிர்
நீ நிலம
தரிசாயக் கிடந்தது நம்பிக்கை

DICHOTOMY

I the tender shoot
You the fire
Garden reduced to ashes

I the boat
You the direction
Journey gets lost

I the lily
You the water
Pond suffocates

I the colour
You the brush
Painting merely dumb

I the word
You the meaning
Meaningless is the epic

I the pollen
You the breeze
Spring becomes sterile

I the sky
You the moon
Light sinks into the horizon

நான் மனுஷன்
நீ மனுஷி
அலியாய்ப் போனது உறவு

நான் சேரி
நீ ஊர்
தூ..........ரமாய்ப் போனது மனிதம்

– தய். கந்தசாமி

I the plant
You the field
Hopes lie barren

I the man
You the woman
Neuter was the union

I the slum
You the 'village'
Humanism banished af...ar

- Thai. Kandasami

*

சரிசெய்ய முடியாத
ஒதப்புடுக்கைப் போல
தூக்கி எறிய முடியா
நிர்ப்பந்தத்தில்
சுமந்தே தீர்க்க வேண்டுவதாய்
இருக்கிறது
ஒரு காலத்தில் பவித்திரத்துடன்
பேணிப் பார்த்திருந்த
